






# தமிழரசு

16.6.1996 ரூ.3



# இந்த இதழில்....


தூய்மையான நிர்வாகமே குறிக்கோள் 2

கலைஞரின் சொல்லாடல் 9

காயிதே மில்லத் கருத்து மணிகள் 11

படமும் செய்தியும் 12

வெயில் கால வேதனைகள் 14

திரைப்படத் தொழிலாளர் வேலை நிறுத்தம் முடிவு 18

அறிவியல் துளிகள் 20

புழுதிக் கோயில் – தாகூர் கவிதை 21

காது குடையும் சிறகு – அப்துல் ரகுமான் 22

அறிவுமதி ஹைகூ கவிதைகள் 24

ஏழை மகளிர்க்கு ஒரு வரப்பிரசாதம் 26

சங்கத் தமிழ் 32

அரசு அறிவிப்புகளின் சாரம் – செய்திச் சரம் 36

காலாட்படை – வங்கமொழிச் சிறுகதை 38

சுவை மிகு தகவல் பக்கம் 46

உலகத்தை இன்னும் குளிர்ச்சியாக்குவோம் 48



தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027

ஆனித் திங்கள்: 2

மலர் :26 இதழ் : 24

16.6.1996

விலை ரூ. 3.

# தூய்மையான ஒரு நிர்வாகத்தை அமைதியான ஒரு தமிழகத்தை உருவாக்க அனைவரும் ஒத்துழைப்புத் தாரீர்

– மாண்புமிகு முதல்வர் கலைஞர்

இந்த் மாநாடு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த மாநாடு. புதிய ஆட்சி அமைந்தவுடன் கூட்டப்படுகின்ற முதல் மாநாடு மட்டுமல்லாமல் இங்கே பங்கு பெறுபவர்கள் பலருக்கு அந்தத் துறையில் அவர்கள் எதிர்கொள்கின்ற பல பிரச்சினைகளை எப்படிச் சந்திப்பது என்று முடிவெடுக்க வேண்டிய மாநாடாகவும் இது அமைந் திருக்கின்றது.

முக்கியமாக நிர்வாக சீர்திருத்தத்தையும், தூய்மையான ஆட்சியையும் தருகின்ற சூளுரையை நாங்கள் மேற்கொண்டதன் அடிப்படையில் பல்வேறு நிலைகளில் தேவையான பணி மாற்றங்களைச் செய்து, அரசின் நிலைப்பாடுகளை வலுப்படுத்துவதற்காக பல முயற்சிகளை மேற்கொண்ட பிறகு, அவற்றின் பயன் மக்களுக்கு முழுவதுமாய்ப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக இந்த மாநாடு கூட்டப்பட்டிருக்கின்றது.

### தவறு நடந்தால் சகிக்கமாட்டேன்

தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைந்தபோது நன்றி அறிவிக்கின்ற கூட்டத்தில் ''எந்தத் தவறு நடந்தாலும் அதைச் சகித்துக் கொள்ள மாட்டேன்'' என்று நான் உறுதிபடக் கூறியது உங்களுக்கெல்லாம் நினைவில் இருக்கலாம். மக்கள் இந்த ஆட்சியிடம் நியாயமான, நேர்மையான, தூய்மையான ஊழலற்ற ஒரு நிர்வாகத்தை எதிர்பார்க்கிறார்கள். வாக்களித்தவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது இந்த அரசின் கடமை. அதனை ஆரம்பத்திலேயே உறுதிப்படுத்தி, களைகளை முளையிலேயே கிள்ளி எறியும் நோக்கத்தில் தான் இந்த மாநாடு கூட்டப்பட்டிருக்கின்றது. ''புல்லுக்குப் போய்ச் சேர வேண்டும்'' என்பதற்காகவே நெல்லுக்கு நீர் திறந்து விடப்பட்ட மாய்மால நிலை மாறி, ''நெல்லுக்கு மட்டும்தான் போய்ச் சேர வேண்டும்.'' என்பதுதான் இந்த மாநாட்டினுடைய குறிக்கோள்.

> மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 11-6-96 அன்று தலைமைச் செயலகத்தில் நடை பெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய தொடக்க உரை

### சிந்தித்துச் செயல்பட தூண்டும் வெளிச்சக்கதிர்

இந்தப் பொதுத் தேர்தல் முடிந்து வாக்குகள் எண்ணி முடிவு அறிவிக்கப்படாத நேரத்திலேயே மே திங்கள் மூன்றாம் நாள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சங்கத்தின் நிர்வாகக்குழு சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், ''ஒரு சில அதிகாரிகளின் செயலால் ஐ.ஏ.எஸ். பணியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுகிறது. எனவே அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியும், ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகியும் உள்ள ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் மீது தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர்களுக்கு ஓய்வு கொடுக்கலாம், அல்லது அதிகாரமற்ற பதவி, வேலை இன்றி சம்பளம் அளிக்கலாம். நேர்மையும் கடமை உணர்வும் மிக்க அதிகாரிகளுக்கு காலத்துக்கு முந்தைய

இடமாற்றம் அளிக்கப்படுவது வருந்தத்தக்கது. அதேசமயம் வளைந்து கொடுக்கக் கூடிய நேர்மையற்ற அதிகாரிகள் பாராட்டப்படுகிறார்கள். இதனால் நியாயமான அதிகாரிகள் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தார்மீக நெறிப்படி அரசியல் பாரபட்சம் இன்றி பாராளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படை தேவைக்கு ஏற்ப பணியாற்ற வேண்டும் என்று இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது. அரசியல் நடுநிலை, உயர்ந்த மரபை பின்பற்றியே தேர்தல் முடிந்தபிறகு, ஆனால் தேர்தல் முடிவுக்கு முன்னர் இந்த அறிக்கைவெளியிடப்பட்டுள்ளது."

என்று குறிப்பிட்டிருந்த தானது ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மட்டுமல்ல, அரசில் பணியாற்று கின்ற எல்லா அதிகாரிகளும் சிந்தித்துச் செயல்படுவதற்கு வழிவகுத்துக் கொடுக்கின்ற வெளிச்சக் கதிராகும்.

### சகதிகளைத் தூர் எடுக்கவேண்டும்

எல்லா நிலைகளிலும் ஒரு தூய நிர்வாகத்தைத் தருவதற்கு இந்த அரசு விரும்புகிறது. ஊழலிலும், லஞ்சத்திலும் சிக்கி ஆட்சித் தேர் நகர முடியாதபடி செய்த சக்திகளையெல்லாம், நாம் முறியடிக்க வேண்டும்; சகதிகளையெல்லாம் தூர் எடுக்க வேண்டும். தனக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பெறுவதற்குக் கூட கணிசமான ஒரு தொகையை தந்தால் தான் முடியும் என்கிற நிலை மாற வேண்டும். அரசு நிர்வாகம் எல்லா தரத்திலும் மேம்பட்டதாக இருக்க வேண்டும். கால தாமதம்தான் ஊழலுக்கு வித்திடுகிறது என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். நிர்வாகத்தில் இருக்கின்ற எல்லா அதிகாரிகளும் விரைந்து பணியாற்ற வேண்டும்.

தூய்மையைப் பற்றி நான் ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். தூய்மை என்பது மேலிருந்து கீழ் நோக்கி செல்லுகிறஅருவியைப்போன்றது. மேலிடத்தில் தூய்மை இருந்தால் தான் கீழ் இருக்கின்ற நிலைகளில் தூய்மையை எதிர்பார்க்க முடியும். முடிவுகளை பாரபட்சமின்றி சட்டத்தின் அடிப்படையில், விதிகளின்அடிப்படையில், தகுதியின் அடிப்படையில் அலுவலர் களும், அதிகாரிகளும் மேற்கொண்டால் நிர்வாகம் தூய்மையாகத் திகழும் என்பதில் எள்முனையளவும் ஐயமில்லை. கோப்புகள் சிகப்பு நாடாவில் கட்டப்பட்டு உறங்கிக்கொண்டிருக்கிற போது ஊழல் எழுந்து உட்கார்ந்து ஊர் சுற்றக் கிளம்பி விடுகிறது. தூய்மையின் ஆணி வேரையே அடியோடு பறித்து விடுகிறது. பொதுமக்களுடைய விண்ணப்பங்களையும், மனுக்களையும், புகார்களையும் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை கண் காணிப்பாளர்களும் உடனுக்குடன் பரிசீலனை செய்து பதில் தர வேண்டும். அவர்கள் பாதிக்கப்பட்டு இருந்தால் பரிகாரம் செய்ய வேண்டும். அரசு இயந்திரத்தை துஷ்பிரயோகம் செய்கிறவர்களைக் கண்டுபிடித்து தண்டனை தர வேண்டும்.

**“புல்லுக்கு போய்ச் சேர வேண்டும் என்பதற்காகவே நெல்லுக்கு நீர் திறந்து விடப்பட்ட மாய்மால நிலைமாறி நெல்லுக்கு மட்டும்தான் போய்ச் சேர வேண்டும்”**



மாவட்டத்தைப் பொறுத்த வரை அரசின் பிரதிநிதிகளாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திகழ்கிறார்கள். மாவட்டத்தில் எந்தத் துறையில் ஊழல் நிகழ்ந்தாலும் அதன் பொறுப்பு மாவட்ட ஆட்சியர் மீது விழுகிறது. எனவே எல்லா துறைகளிலும் தூய்மையையும் விதிகளையும் கடைப்பிடிக்கக் கூடிய அளவுக்கு ஆய்வுப் பணிகளை மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

### உயிருக்குப் பாதுகாப்பு காவல்துறையே

பொதுமக்களைப் பொறுத்த வரை தங்களுடைய உயிருக்கு பாதுகாப்பு என்று காவல் துறையையே நம்பி இருக்கிறார்கள். சீருடை அணிந்த சிப்பாயாக நின்று பாமர மக்கள் சுதந்திரத்துடனும், நிம்மதியுடனும் வாழ்வதற்கு காவல் துறை தான் உத்திரவாதம் அளிக்க வேண்டும். கடைநிலையில் உள்ளவர்கள் நேர்மையாய் இருப்பதற்கு வழிகாட்டியாய் இருக்க வேண்டியவர்கள் உயர் மட்டத்தில் இருக்கின்ற அதிகாரிகள் தான். அவர்களுடைய கண்காணிப்பும், கடுமையான உழைப்பும், எச்சரிக்கை உணர்வும், விழிப்புணர்வும் தான் தூய்மையான நிர்வாகத்தை உறுதி செய்ய முடியும்.

சட்டம் ஒழுங்கைப் பேணிக்காப்பதில் மாவட்ட நிர்வாகம் முழு முனைப்புடன் செயல்பட வேண்டும். ''சட்டம் மட்டும் இருக்கிறது; ஒழுங்கு இல்லை'' என்கிற நிலை இருக்கக்கூடாது. சட்டம், ஒழுங்கை முறையாகப் பேணி மாவட்ட நிர்வாகம் எப்பொழுதும் தயார் நிலையிலே இருக்க வேண்டும். தமிழ் நாட்டில் 12506 கிராம அலுவலர்கள் இருக்கிறார்கள். 84000 காவலர்கள் இருக்கிறார்கள். 1172 காவல் நிலையங்கள் இருக்கின்றன. 178 துணை காவல் கண்காணிப்பாளர்கள் இருக்கிறார்கள். 184 வட்டாட்சியர்கள் இருக்கிறார்கள். 66 கோட்டாட்சியர்கள் இருக்கிறார்கள் என்பதை புள்ளி விவரங்கள் சொல்லுகின்றன. எல்லா நேர்விலும் நிர்வாகத் துறையும், காவல்துறையும் தயார் நிலையில் விழிப்புணர்வுடன் செயல்பட்டால் தான் சட்டம், ஒழுங்கு பிரச்சினைகளை சமாளிக்க முடியும்.

''நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்''


என்பது வள்ளுவம். ஏற்கனவே பிரச்சினைகள் தோன்றிய பிறகு அவற்றை சரி செய்ய முனைவதைவிட வரும் முன் காப்பதே நிர்வாகத்தினுடைய அணுகுமுறையாக இருக்க வேண்டும். கிராம நிர்வாக அலுவலர்கள் உடனுக்குடன் தகவல்களை மாவட்ட நிர்வாகத்திடம் தெரிவிக்க வேண்டும். காவல் நிலையங்கள், தன் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் இருக்கும் சட்ட ஒழுங்கை துல்லியமாகக் கவனிக்க வேண்டும்.

### மனிதாபிமானமிக்க அணுகுமுறை வேண்டும்

சட்டம் ஒழுங்கு பிரச்சினையைத் தூண்டுபவர்கள் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி, காய்தல், உவத்தல் அகற்றி அவர்களை சட்டத்தின் கீழ் கொண்டு வந்து தகுந்த தண்டனை வழங்க வேண்டும். அலுவலர்கள் அடிக்கடி கிராமங்களுக்குச் செல்வதும், அந்த மக்களுடைய குறைகளைக் கேட்பதும் நிர்வாகத்திற்கும், பொது மக்களுக்கும் சுமூகமான ஒரு உறவை ஏற்படுத்த உதவும் கடந்த காலத்தில் சட்டம்,



ஒழுங்கு பாதிக்கப்பட்ட கிராமங்கள் எவ்வளவு என்ற தகவல்களைச் சேகரித்து அந்தக் கிராமங்களுக்கு அடிக்கடி கூட்டுப் பயணம் செய்து, அந்த மக்களோடு தங்கி அவர்கள் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அந்தப் பகுதியில் சட்டம் ஒழுங்கு நிலைமை சரியாவதற்கு வழிவகை செய்ய வேண்டும். நிர்வாகம் தொலைவிலே இருக்கிற போது பிரச்சினைகள் நெருங்கி வந்துவிடுகின்றன. அலுவலர்கள் சிந்துகிற சிரிப்புகளுக்குக்கூட சிவப்பு நாடாக்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. அது மக்களை நிர்வாகத்திடமிருந்து அன்னியப்படுத்திவிடுகிறது. அந்தச்சூழலை மாற்றியமைக்க மனிதாபிமானமிக்க அணுகுமுறை இருந்தால் பெருமளவு சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் எழுவதற்கு வாய்ப்புகள் இல்லை.



தமிழ் நாட்டில் கடந்த ஆட்சிக்காலத்தில் குற்றங்கள் பெரும் அளவில் அதிகரித்து மக்களுடைய உடமைகளுக்கும், உயிருக்கும் பாதுகாப்பு இல்லை என்கின்ற நிலைமை ஏற்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். நிர்வாகத்தைத் தட்டிக்கேட்பவர்கள் பலர் அச்சுறுத்தப்பட்டும், தண்டிக்கப்பட்டும் அவதிக்குள்ளானார்கள். இந்த நிலைமையை மாற்றி குற்றங்களைக் குறைப்பதையே தன்னுடைய இலட்சியமாகக் கொண்டு இந்த அரசு செயல்பட உறுதி பூண்டுள்ளது. குற்றம் புரிந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலம் மேற்கொண்டு குற்றங்கள் நடைபெறுவது தடுக்கப்பட வேண்டும் என்பது தான் இந்த அரசின் நிலைப்பாடு தமிழகம் இனிவரும் காலத்தில் பொது மக்கள் மகிழ்ச்சியுடனும், அச்சமின்றியும் நடமாடுகின்ற ஒரு களமாக மாற வேண்டும். காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இதிலே கணிசமான பங்கை வகிக்க வேண்டும்.

**முதல் அட்டை சொல்லும் செய்தி**

அமைதியைக் குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்களைக் கண்டறிந்து அவர்களின் சமூகவிரோதச் செயல்பாடுகளுக்குத் தடுப்புச்சுவர் எழுப்பி சமுதாயத்தில் முளைக்கும் கள்ளிக்காடுகளை அறவே ஒழித்திட வேண்டும். நிர்வாகம் தயார் நிலையில் இருக்கின்ற போது குற்றங்கள் நிகழ்வதற்கு வாய்ப்புகள் குறைவு. குற்றங்களைத் தடுப்பதற்கு நேர்மையான நிர்வாகம் அவசியமாகிறது. காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் இந்தத் தகவல்களை இந்த அரசின் எல்லாத்தரப்பினர்க்கும் தெளிவுபடுத்த வேண்டும். தங்கள் கீழ் உள்ள அதிகாரிகளை ஊக்குவித்தும், உத்வேகப்படுத்தியும் கடமை உணர்வுக்கான புதிய இரத்தத்தை பாய்ச்சியும் செயல்பட வேண்டும்.

**“கோப்புகள் சிகப்பு நாடாவில் கட்டப்பட்டு உறங்கிகொண்டிருக்கிற போது ஊழல் எழுந்து உட்கார்ந்து ஊர் சுற்றக் கிளம்பி விடுகிறது. தூய்மையின் ஆணி வேரையே அடியோடு பறித்து விடுகிறது”**

கள்ளச்சாராயம் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் பெருக்கெடுத்துள்ளது என்பது உங்களுக்குத் தெரியும். யார்

அதைத் தடுக்க வேண்டுமோ அவர்களே அதை முடுக்க முயல்பவர்களாக மாறிப் போயிருக்கிறார்கள். என்னதான் அரசு மதுவிலக்கை அமல் படுத்தினாலும் கள்ளச்சாராயம் ஒரு பெருந்தொழிலாக நடை பெறுகிறகாரணத்தினால்போதைப் பழக்கம் ஒழியவில்லை. ஏழை களின் வாழ்வும், பெண்களின் வாழ்வும் மேம்படவில்லை. குடும்பத்தில் அமைதி மலர்ந் திடவில்லை. மாவட்ட நிர்வாகம், மதுவிலக்கில் முனைப்புடன் செயல்பட வேண்டும். கள்ளச் சாராயத்தை முற்றிலுமாக அகற்றுவதற்குப் பாடுபட வேண்டும். தீவிரமான ஆய்வு நடத்தி கள்ளச்சாராய ஊற்றுக் கண்களைக் கண்டுபிடித்து அவற்றை அடைக்க வேண்டும். இந்தப் பணியிலே வறுமையின் காரணமாக ஈடுபட்டிருக்கின்ற வர்களைக் கண்டுபிடித்து ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் வசதிகளைக் கொடுத்து அவர் கள்மீண்டும் இதில் ஈடுபடாமல் இருக்க வழிவகை செய்ய வேண்டும். பயிற்சிகளைத்தந்து அவர்கள் தீய வழிமுறைகளில் தங்கள் வாழ்க்கைப் பயணத்தை நடத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதாவது நோயுற்ற வர்களைக் கண்டு பிடிப்பது காவல்துறையின் பங்கு என்றால் அதற்கு சிகிச்சை அளிப்பது மாவட்ட நிர்வாகத்தின் பங்காக இருக்க வேண்டும்.

### மதுவை ஒழிக்க மனமாற்றம் தேவை

மதுவை ஒழிப்பதற்கு தண்டனை மட்டும் போதாது. மனமாற்றமும் தேவையென்ப தால் மதுவின் பிடியிலிருந்து மக்களில் ஒரு பகுதியினரை விடுவிப்பதற்காக மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபடும் பொருட்டு 25000 மகளிரை நியமிக்க இந்த அரசு உத்தேசித்துள்ளது. அவர் களை உரிய முறையில் பயன் படுத்தி, போதையின்பாதையில் விழுந்து குடும்பங்கள் சிதறி விடாமல் பாதுகாக்கும் கடமை உணர்வு நமக்கிருக்கிறது. அதற்கான ஆக்கப் பூர்வமான கருத்துக்களை இந்த மாநாட்டில் நீங்கள் எடுத்துரைக்கலாம்.

தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள்வாழ்க்கை மேம்பட வேண்டும். அவர் களுடைய குடியியல் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு தீவிரமாக இருக்கிறது என்பதை நீங்கள் உணர்வீர்கள். வகுப்புக்கலவரங் கள் நடக்கும் போதெல்லாம் ஒடுக்கப்பட்டவர்கள் மீதுதான் வன்முறை வெறியாட்டங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

**“தூய்மை என்பது மேலிருந்து கீழ்நோக்கி செல்லுகிற அருவியைப் போன்றது. மேலிடத்தில் தூய்மை இருந்தால் தான் கீழ் இருக்கின்ற நிலைகளில் தூய்மையை எதிர்பார்க்க முடியும்”**

**கல்வி**

**ஆணுக்குக் கல்வி புகட்டும் போது தனி ஒருவனுக்குக் கல்வி புகட்டுகிறாய்;**
**பெண் ஒருத்திக்குக் கல்வி புகட்டும் போது ஒரு குடும்பம் முழுவதற்கும் கல்வி புகட்டுகிறாய்.**

– ராபர்ட் மாரிசன் மெக் ஈவர்

## நான் வந்து உதவி செய்கிறேன்!

அமெரிக்காவில் ஒருமுறை ஒருவர் குதிரைமீது சென்று கொண் டிருந்தார். அப்போது அவர் வழியில் ஒரு காட்சியைக் கண்டார். சில நீக்ரோ அடிமைகள் ஒரு பெரிய மரத்தைத் தூக்கி வண்டியில் ஏற்ற முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அவர்களை ஒரு வெள்ளைக்காரர் கடுஞ் சொற்களால் மிரட்டி வேலை வாங்கிக் கொண்டிருந்தார். அவர் கள் எவ்வளவு முயன்றும் அந்த மரத்தை அவர்களால் தூக்கி வைக்க முடியாமல் இருந்தது. அப்போது குதிரைமீது சென்றவர் அந்த வெள்ளைக்காரரைப் பார்த்து, ''ஐயா நீங்களும் அவர்களுடன் சேர்ந்து உதவி செய்தால், அந்த மரத்தைத் தூக்கிவிடலாமே'' என்று கூறினார். அதற்கு அந்த வெள்ளைக்காரர் ''என்னைக் கேட்க நீ யார்? உனக்கு விருப்பம் இருந்தால், நீ கீழே இறங்கிவந்து அவர்களுக்கு உதவி செய்'' என்றார். உடனே அவர் குதிரையை விட்டு இறங்கி வந்து அந்த அடிமைகளுக்கு உதவி செய்தார். அந்த மரமும் வண்டியில் ஏற்றப் பட்டது. பிறகு குதிரைமீது வந்தவர் அந்த வெள்ளைக் காரரிடம், ''என் பெயர் ஜார்ஜ் வாஷிங்டன். நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருக்கின்றேன். மீண்டும் இப்படி உதவி தேவைப்பட்டால், எனக்குச் சொல்லியனுப்புங்கள். நான் வந்து உதவி செய்கிறேன்'' என்று கூறி விடைபெற்றுச் சென்றார். அதைக் கேட்ட அந்த வெள்ளைக்காரர் தனது செயலைக்கண்டு வெட்கமடைந்தார்.

அவர்களுடைய குடியியல் உரிமையைப் பாதுகாப்பதற்கு மாவட்ட நிர்வாகம் முழு உத்திர வாதம் அளிக்க வேண்டும். ஏற்கனவே கடந்த கால ரணங்கள், தழும்புகளாக மாறி நிற்கின்ற பகுதிகளில் வாழ்கின்ற மக்களைச் சந்தித்து அவர்களின் குறை களைப் போக்குவதற்கு முயற்சி கள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட இடங்களில் வகுப்புக் கலவரங்கள் தொடராமல் இருக்க தேவையான அனைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அந்தப் பகுதியின் அருகிலேயே மென்மையான நரம்பு மண்டலமாய் பாதிப்புக்கு இடமளிக்கும் வகையில் அமைந்துள்ள சுற்றுப்புற கிராமங்களில் வகுப்புக்கலவரங்கள் நடைபெறாமல் இருக்க எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## பணியில் நேர்மை பழகுவதில் இனிமை

காவல் நிலையங்கள் குற்றவாளிகளைக் கண்டிப்பதற்காகவே தவிர தண்டிப்பதற்காக அல்ல. காவல் நிலையங்களே குற்றக்கூடங்களாக மாறக் கூடாது. காவல்துறை இதில் மிகுந்த எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் செயல்பட வேண்டும். ஒவ்வொரு முறை காவல் நிலைய மரணம் நிகழும் போதும் அது மாநிலத்தையே உலுக்கிவிடுகிறது. மேலும் காவல் நிலைய மரணம் பல வினாக் குறிகளையும், வியப்புக் குறிகளையும் எழுப்பி நிர்வாகத்தைச்சங்கடத்தில் ஆழ்த்துகிறது. இதைக்குறித்து கோட்டாட்சியர்களால் விசாரணைகள் செய்யப்பட்டாலும் மக்கள் மத்தியில் அவை அவநம்பிக்கையையே பெரும்பாலும் ஏற்படுத்துகின்றன. கற்பழிப்பு, கொலை போன்றவை காவல் நிலையத்தில் நடக்கும்போது காவல் துறையின் மீது மக்கள் வைத்திருக்கும் மதிப்பு அடியோடு சரிந்து விடுகிறது. இவை மாறுவதற்கு காவல்துறை முழுமையாக தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்பவர்களைக் குறைந்தபட்ச மனிதாபிமானத்தோடு நடத்த வேண்டும். அவர்களே சட்டத்தைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளக் கூடாது. காவல் நிலையங்கள் மக்கள் எளிதில் செல்வதற்கும், புகார்களைக் கொடுப்பதற்கும் உகந்ததாய் இருக்க வேண்டும். ''பணியில் நேர்மை; பழகுவதில் இனிமை'' என்ற கோட்பாட்டுடன் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் செயல்பட வேண்டும். மக்களுக்கு இந்தத் துறையின் மீது இருந்த நம்பிக்கை புதுப்பிக்கப்பட வேண்டும். மாவட்ட நிர்வாகம் பி.எஸ்.ஓ 145 விசாரணைகளைத் துரிதப்படுத்தி தவறு செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். அது மற்றவர்களை அந்தக் குற்றங்கள் செய்யாமல் தடுக்க ஒரு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

> **“நிர்வாகம் தொலைவிலே இருக்கிறபோது பிரச்சினைகள் நெருங்கி வந்துவிடுகின்றன. அலுவலர்கள் சிந்துகிற சிரிப்புகளுக்குக்கூட சிகப்பு நாடாக்கள் கட்டடப்பட்டு இருக்கின்றன”**

இந்த மாநாட்டில் இவற்றையெல்லாம் பற்றி தெளிவாகவும், விரிவாகவும் ஆராய்ந்திட இருக்கின்றோம். இதில் உங்கள் அனுபவங்களையும், கருத்துக்களையும், ஆலோசனை



களையும் கேட்டறிந்து முக்கியமான முடிவுகளை எடுப்பதற்காக அரசு தயாராக இருக்கின்றது. தமிழகம் புதுப் பொலிவு பெற வேண்டும். தமிழக அரசு, தூய்மையான ஒரு நிர்வாகத்தை, அமைதியான ஒரு தமிழகத்தை உருவாக்க நீங்கள் அனைவருமே உங்களுடைய முழுமையான ஒத்துழைப்பைத் தர வேண்டும். பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் எழுச்சியுடன் இருக்க புதிய வாழ்வை வழங்குவதற்கு மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும், ஏன்; அரசுத் துறையைச் சேர்ந்தவர்கள் அனைவருமே உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

■



## 'சிங்கிள் டெண்டர்' முறை அறவே கூடாது தவறு செய்யும் அதிகாரிகளுக்கு தமிழக அரசு கடும் எச்சரிக்கை

அரசுத்துறை மற்றும் அரசு நிறுவனங்களில் எந்தவொரு பணிக்கும் முந்தைய ஆட்சியில் இருந்து வந்த ''சிங்கிள் டெண்டர்'' முறையிலே அனுமதி வழங்குவது கூடாது. பொது டெண்டர் முறையிலேதான் பணிகளுக்கான ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமென்று ஆட்சிப் பொறுப்பேற்று கொண்டவுடன் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் முடிவெடுத்து அறிவித்திருந்தார்.

சில இடங்களில் சில அலுவலர்கள் இன்னமும் பொது டெண்டருக்கான விண்ணப்பப் படிவங்களைக் கோருகின்ற அனைவருக்கும் கொடுக்காமல், மறைமுகமாக பழைய சிங்கிள் டெண்டர் முறையையே கடைப்பிடிப்பதாக புகார்கள் வந்துள்ளன. முதலமைச்சருடைய அறிக்கையின்படி நடந்து கொள்ளாமல் இவ்வாறு முறைகேடாக நடந்து கொள்கின்ற அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ் நாடு அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கலைஞரின் சொல்லாடல்



## நான் - முடிச்சோழன்

கவிஞர் வைரமுத்து எழுதிய 'தண்ணீர் தேசம்' என்ற நூல் வெளியீட்டு விழாவின் போது திருமதி பொன்மணி வைரமுத்து, நான்கு முறை முதல்வராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார் என்பதற்காக கலைஞர் அவர்களை 'நான் முடிச்சோழன்' என்று குறிப்பிட்டார்.

பிறகு பேசிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இதனைக் குறிப்பிட்டு, *'நான்-விஜிடேரியன், நான்-பிராமின்* என்று கூறுவார்கள். அது போல சகோதரி பொன்மணி வைரமுத்து என்னை ''நான் - முடிச் சோழன்'' என்று என் தலையில் முடியில்லை என்பதை மணிப் பிரவாளமாக - திறமை யாகக் குறிப்பிட்டிருக் கிறார். என்று கூறிய போது அரங்கமே அதிர்ந்தது.

◆

## கரித்துண்டு பற்றி ஒரு கவித்துண்டு

டாக்டர் மு.வ. அவர்களது கரித்துண்டு கதை திரு வளையாபதி முத்துக்கிருஷ்ணன் குழுவினரால் நாடகமாக டாக்டர் கலைஞர் அவர் களின் தலைமையில் செம்பொன்னார்கோவிலில் நடப்பதாக இருந்தது. நாடகக் கலைஞர்கள் வந்த வேன் விபத்துக்குள்ளானதால் நாடகம் மறுநாளைக்கு ஒத்தி வைக்கப் பட்டது.

மறுநாள் நாடகத்திற்கு இடையில் பேசிய கலைஞர் அவர்கள் ''நேற்று நான் மேடைக்கு வரும்போது விளநகர் கணேசன் (அமைப்பாளர்) கண்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. அவர் கண்ணில்தான் கரித்துண்டு விழுந்து விட்டதோ என்று எண்ணினேன்.

இன்று நாடகம் சிறப்பாக நடை பெறுகிறது. ஆனால், நேற்று இந்நேரம் வேன் மரத்தில் மோதியதா? மதகில் மோதியதா? வேனில் வந்தவர்களின் கறித் துண்டாவது நமக்குக் கிடைக்குமா என்று அஞ்சிக்கொண்டிருந் தோம்'' என்றார்.

கலைஞர்அவர் களின் சொல், கரித் துண்டாக அல்ல, ஒளித்துண்டாக உள்ளத் தில் விழுந்ததால், அவை மகிழ்ச்சி யில் ஆர்ப்பரித்தது.

## கிங் மேக்கர்

காயிதே மில்லத் நூற்றாண்டு நிறைவு விழாவில் திரு இப்ராஹிம் சுலை மான்சேட் பேசும் போது மத்திய அரசு அமைய காரணமாக இருந்தது கருணாநிதியும் மூப்பனாரும் தான் என்று குறிப்பிட்டு இரு வரையும் கிங் மேக்கர் (King Makers) என்று சொன்னார். அதற்கு ''நாங்கள் கிங் மேக்கர் அல்லவா? அதை நாங்கள் ஒத்துக் கொள் கிறோமோ இல்லையோ? அதுவேறு; ஆனால், நாங்கள்இருவரும்டில்லிக்குச்சென்று மத்தியில் ஆட்சியமைய காரணகர்த்தாக்களாக இருந்த வர்களோடு நாங்களும் பங்கேற்றோம் என்பதும் உண்மை.கிங்மேக்கர்என்பதைக்கொஞ்சம்சிந்தித் துப் பார்த்தால் King இதில் முதல் எழுத்து K. Makers இதில் முதல் எழுத்து M. ஆக, இதில் K கருணாநிதியும், M என்பது மூப்பனாரையும் குறிக்கிறது அல்லவா?'' என்றார் கலைஞர்.



இந்தியாவிலேயே மிக அதிக வேட்பாளர்கள் போட்டியிட்ட

# மொடக்குறிச்சித் தேர்தல் முடிவு

1996 சட்டமன்ற தேர்தல் இரண்டு கட்டமாக தமிழ்நாட்டில் அனைத்துத் தொகுதிகளிலும் நடைபெற்றது. மொடக்குறிச்சித் தொகுதியில் மட்டும் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டது. அதிக எண்ணிக்கையில் வேட்பாளர்கள் போட்டி யிட்டதே இதற்குக் காரணம்.

மே மாதம் இரண்டாம் நாள் நடைபெற வேண்டிய மொடக்குறிச்சித் தேர்தல், ஜூன் முதல் நாள் நடைபெற்றது. இந்தத் தொகுதியில் 3 பிரதான கட்சிகளோடு, 1027 சுயேச்சைகள் உட்பட 1030 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். மொத்தம் 61.07 சதவீத வாக்குகள் பதிவாயின.

வாக்குப்பதிவில் ஒரே ஒரு வாக்காளர் மட்டும் கொஞ்சமும் சிரமப்படாமல் முதல் பக்கத்தி லிருந்து கடைசி பக்கம் வரை, ஒவ்வொரு வேட்பாளருக்கும் தனது வாக்கினை அளித்து வேடிக்கை நிகழ்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

தி.மு.க. சார்பில் போட்டியிட்ட திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன், தனக்கு அடுத்து வந்த அ.இ.அ.தி.மு.க. வேட்பாளர் திரு. ஆர். என். கிட்டுசாமியைவிட சுமார் 40,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்தார்.

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் ....... | 1,94,579 |
| பதிவான வாக்குகள்...... | 1,18,286 |
| செல்லாதவை.... | 1,071 |

**திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் - தி.மு.க. வெற்றி**

| | |
|---|---|
| திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் – தி.மு.க. – | 64,436 |
| திரு. ஆர்.என். கிட்டுசாமி – அ.இ.அ.தி.மு.க. – | 24,896 |
| திரு.கே. இளஞ்செழியன் – ம.தி.மு.க. – | 20,403 |
| இதர வேட்பாளர்கள் – | 7,480 |

தாயகத்தின் மீது படையெடுத்துவருவோர் முஸ்லீம்களேயானாலும் அவர்களை முறியடித்துத் துரத்தும் உள்ள உறுதி நமக்கு வேண்டும்! முஸ்லீம் சமுதாயம் காட்டிக் கொடுத்ததால் எந்த நாடும் வீழ்ச்சியுற்றதாக வரலாறே கிடையாது.


நீங்கள் வாழும் நாட்டை முன்னேறச் செய்யுங்கள்; எல்லோருடனும் சமாதான மாக வாழுங்கள்; அதுவே நாட்டுக்கும் நல்லது, நமக்கும் நல்லது!

ஒன்றுபடாதவரை யாருக்கும் நல்வாழ்வு இல்லை; ஒன்றுபட்டுவிட்டால் நமக்கு இணை யாரும் இல்லை!

திட்டங்களிலெல்லாம் சிறந்த திட்டம் பொது வாழ்க்கையிலிருந்து லஞ்ச ஊழலை ஒழிப்பதுதான்; லஞ்ச ஒழிப்பே ஒரு திட்டமாகும்!

# காயிதேமில்லத் கருத்து மணிகள்

எல்லா மார்க்கங்களையும் சமமாகப் பாவிக்க வேண்டும்; அதுதான் மதச்சார்பற்ற தன்மையின் உண்மையான அர்த்தம்.



உலகில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மூத்த மொழி நம்முடைய தமிழ் மொழிதான்! ஆக,மிகப்பழங்காலத்திலேயே தமிழனின் பொற்காலம் தொடங்கிவிட்டது.

வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் தேசிய ஒருமைப்பாடு; இதை ஏற்காத அரசியல்வாதிகள் ஒற்றுமைக்கு உலை வைப்போராவர்!

# படமும்

1. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை மாண்புமிகு மத்திய அரசின் நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார் (6.6.96)


2. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை, அவரது இல்லத்தில் முன்னாள் பாரத பிரதமர் திரு.ஏ.பி. வாஜ்பாயி அவர்கள் சந்தித்தார். அருகில் மாண்புமிகு மத்திய அரசின் தொழிலமைச்சர் திரு. முரசொலிமாறன் அவர்கள் உள்ளார். (8.6.96)

3. சென்னையில் நடைபெற்ற கண்ணியத்துக்குரிய காயிதேமில்லத் நூற்றாண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உரையாற்றுகிறார் (5.6.96).

4. தெலுங்கு-கங்கை குடிநீர்த்திட்டம் தொடர்பாக மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. துரை முருகன் அவர்கள் மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்களை சந்தித்துப் பேசினார். (8.6.96)


1


2


4


3

# செய்தியும்




# வெயில்கால வேதனைகள்

டாக்டர் ஆர். ஜெயந்தி எம்.டி.,

''போன வருஷத்தை விட இந்த வருஷம் வெயில் அதிகம்; ஒண்ணும் முடியலை''என்பார்கள், சிலர்; ஆனால் ஒன்று,போனவருஷத்தை விட இந்த வருஷம் அவருக்கு ஒரு வயது கூடியிருக்கும்; இது தான் உண்மையே தவிர, வெயில் எப்போதும் போலத்தான் இருக்கும்'' என்று நகைச்சுவை ததும்பச் சொல்லுவார் திருமுருக கிருபானந்த வாரியார்.

என்ன இருந்தாலும் இந்த வருஷம் அதிகம் தான்! அக்கினி நட்சத்திரம் தாண்டியும் கூட, 108 டிகிரி வரை வெயில் உள்ளதை இளைஞரோ, கிழவரோ யாரால் மறுக்க முடியும்?

மழைக்காலம் வர இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் இருக்கிறது. இருந்தும் வெயில் குறையவில்லை.வெயில் அதிகம் இருந்தால் மழைக்காலத்தில் மழையும் அதிகம் இருக்கும் என்பார்கள். இப்பொழுது பெய்கிற மழையை எல்லாம்கணக்கில் சேர்க்கத் தேவையில்லை.

கல்விக் கூடங்களில், கோடை விடுமுறைக் காலத்தில் கூட இந்த வெயிலில் எங்கே தலைகாட்ட முடிந்தது? 'ஓடி விளையாடு பாப்பா' என்று பாரதி சொன்னதை எப்படிச் செயலாக்க முடிந்தது? பிள்ளைகளெல்லாம் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தார்கள்; மாலை நேரம் வந்தால் போயிற்று; பகலெல்லாம் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்து வியர்வையில் நனைந்து சோம்பிக் கிடந்த அவர்கள் - ''கடற்கரைக்கு அழைத்துப் போ''... ''பூங்காவுக்குப் போகலாம்'' ''ஏதாவது ஏர்கண்டிஷன் தியேட்டரில் படம் பார்க்கச் செல்லலாம்'' என்றெல்லாம் தமது பெற்றோரைத் தொல்லைப் படுத்தினர்.

தினசரி அப்படியெல்லாம் அழைத்துப் போகிற அளவுக்கா நம் நாட்டுக் குடும்பங்களின் பொருளாதாரம் வளம் பெற்றிருக்கிறது? இல்லையே!

மக்கள் நலமும் பொதுச் சுகாதாரமும் அவர்கள் வாழும் நாட்டின்தட்பவெப்ப நிலைகளையே பெரிதும் சார்ந்திருக்கும். அதிலும் பூமத்திய ரேகைக்கு அருகே உள்ள - கோடை காலத்தின் தாக்கம் அதிகமிருக்கும் (Tropical Countries) நம்முடைய நாட்டிலோ, வெயில் நெருப்பாய்த் தகிப்பதில் வியப்பிருக்க முடியாது. அதன் விளைவாக மக்களுக்கு ஏற்படுகிற நோய்நொடிகளுக்கும், குறைபாடுகளுக்கும் (Disorders) கணக்கு வழக்கிருக்காது. அதை விவரிப்பதே இந்தக் கட்டுரை.

**கோடைக் கேடுகள் முவ்வகை:**

கோடை காலத்தில் நமக்கு நேரும் சீர்கேடுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

முதலாவது - கோடை வெப்பத்தின் நேர்முகத்தாக்குதலால் (Direct) உண்டாகக் கூடியது.

இரண்டாவது - மிகுதியான வெப்பத்தின் விளைவுகளால், அல்லது மறைமுகத் தாக்குதலால் (Indirect) ஏற்படக்கூடியது.

மூன்றாவது - வேனிற் காலத்தில் வரக்கூடிய பொதுவான நோய்கள்.

இந்த மூன்றிலும் கூட - வெப்ப அயர்ச்சி (Heat-Exhaustion), வெப்ப வாதம் (Heat-Stroke) ஆகியவைகளை, நாம் முதல் வகையைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம்.

**வெப்ப அயர்ச்சி:**

கோடைக்காலத்தில், அதிக உஷ்ணமுள்ள நாட்களில், வெயிலின் நேரடித் தாக்குதலில் கடினமான வேலைகளில் ஈடுபடுவோருக்கு ஏற்படுவதுதான் வெப்ப அயர்ச்சி என்பது. இதன் காரணமாக உடலில் உள்ள முக்கியத் தாதுப்பொருட்களும் (Electrolytes) நீரும் நமது வியர்வை மூலமாக வெளியேறும்.

இதனால் அயர்ச்சி, தசை முறுக்கேறுதல் (Cramps) போன்றவை நம் உடலில் ஏற்படும். இதைத் தவிர்க்கப் பெரிதாக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை; நிறையத் தண்ணீர் குடித்தாலே போதும். அம்மாதிரியான கோளாறுகளைத் தடுத்துவிடலாம்.

தாகம் என்றதும் இன்னொன்றும் இங்கே நம் நினைவுக்கு வருகிறது. தண்ணீர்ச்சத்து உடலில் குறைகிறபோது வயிற்றுப்போக்கு, வறட்டு இருமலெல்லாம் கூட ஏற்படும். இது போன்ற இன்னல்களிலிருந்து விடுபட, அடிக்கடி தண்ணீர் குடிக்கலாம். 'பச்சைத் தண்ணீரா?' என்று கேட்காதீர்கள்; எங்கும் தண்ணீர்த் தட்டுப்பாடு இருப்பதால் எங்கெல்லாமோ இருந்து லாரிகளில் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது; எனனென்ன கிருமிகள் - எப்படிப்பட்ட நோய்கள் அவற்றால் பரவுமோ யார் கண்டது?

> **எல்லையற்ற பொறுமை, திறந்தவெளி இதமான உழைப்பு, குறைந்த கவலை – இவையே உடல் நலனுக்கும் நீண்ட வாழ்வுற்கும் ஏற்ற பண்புகள்**
> **– ஸர். ஃபிலிப் ஸிட்னி**

> **நோய் வரும்வரை உண்பவன், உடல் நலமாகும் வரை உண்ணா நோன்பு மேற்கொள்ள வேண்டும்.**
> **– தாமஸ் புல்லர்**

ஆகவே, குறைந்தது இருபது நிமிஷமாவது கொதிக்கவைத்து ஆறிய தண்ணீரைச் சாப்பிடுங்கள்; ஆபத்தில்லை, அதுதான் நல்லதும் கூட.

**வெப்ப வாதம்:**

கோடைக்காலக் கொடுமையிலே (Heat Stroke) எனப்படும் வெப்ப வாதம் - அதாவது மயக்கத்தோடு கூடிய உறுப்பியக்கத்தடை உண்டாகும்.

வெப்ப அயர்ச்சி மேலும் முற்றி, நம் நரம்பு மண்டலத்தைத் தாக்கி, நம்மை அடியோடு நினைவிழக்கச் செய்துவிடும் (Coma) விபரீதமும் வெப்ப வாதத்தால் உண்டாகும். இன்னும் சொல்லப்போனால் இதனால் சிலருக்கு - மயங்கி விழுதல், மரணமடைதல் போன்ற ஆபத்துக்களெல்லாம்கூட ஏற்படும். நேரத்தோடு சிகிச்சையளித்தால் சிலரைப் பிழைக்கவைக்க முடியும்; இல்லையேல் இரண்டொருவருக்குக் கைகால் விழுந்துவிடுவதை நிவர்த்திபண்ண முடியாமலே போய்விடும்.

கடுமையான வெப்பத்தின் தாக்கத்தால் வெளியேறும் வியர்வையின் மூலம் உடல் வெப்பம் குறையக்கூடும்; ஆகவே, காற்று உள்ளே புகாத சில்க், பட்டு, நைலான், நைலக்ஸ், சிந்தடிக், பாலியஸ்டர், டெர்லின், டெரிக்காட்டன் போன்ற துணிகளால் ஆன ஆடைகள் அணிவதைக் கோடைக்காலத்தில் குறைக்கலாம் - அல்லது தவிர்க்கலாம்; கதர், கைத்தறி ஆடைகளே கோடைக்கு ஏற்ற ஆடை; அதுவும் தடித்ததுணியாக இல்லாதிருந்தால் நல்லது. காற்று உள்ளே செல்ல வேண்டுமல்லவா?

மேலே நாம் குறிப்பிட்ட இயலாமைகள் நீங்க வேண்டுமானால் இன்னும் சில வழி

முறைகளும் இருக்கின்றன. நிறையக் காய்கறி, பழம் ஆகியவற்றைத் தினந்தோறும் நாம் நம் உணவோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். இதன்மூலம் நமது உடலின் சக்தி இழப்பை நாம் ஈடுசெய்துவிட முடியும். கோடைக் காலத்தில் முடிந்தவரை நாம் நம் உழைப்பைக் குறைத்துக் கொள்வது நல்லது. உடலைச்சுத்தமாகவைத்துக் கொள்ளுவதும், சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுவதும், வீட்டைக்காற்றோட்டமாக வைத்துக் கொள்ளுவதும் அதைவிட நல்லது.


**மறைமுக பாதிப்புகள் :**

வெப்பத்தின் மறைமுகத் தாக்குதலால் சிலவகைபாதிப்புகள் ஏற்படக்கூடும் என்று

கழிப்பதில் பொறுக்க முடியாத எரிச்சல் போன்ற துன்பம் ஆகியவை உண்டாகும்.

உ. குறிப்பாகக் கோடைக் காலத்தில் சில நோய்களின் தாக்கம் அதிகரிக்கும் (Epidemics). குறிப்பாக சின்னம்மை, பெரியம்மை, தட்டம்மை ஆகியவைகள் பரவும். இதனால் பாதிக்கப்படும் நபரை மருத்துவர்களிடம் அழைத்துப்போய்க் காட்டத் தவறக்கூடாது.

ஊ. நச்சு உயிரி தொடர்பான வியாதிகள் (Viral Fevers) ஏற்படும்.



மேலே தெரிவித்தோமே! அதுபற்றி இங்கே விளக்கலாம்.

அ. அதிகமாக வியர்வை ஏற்படும். இதனால் உடலில் தண்ணீர்ச் சத்து குறைவடையும் (Simple Dehydration).

ஆ. வேர்க்கூரு (Miliaria Rubra) வேனல் கட்டி (Furuncles / Abscesses) போன்றவைகள் ஏற்படும்.

இ. வியர்வையால், மென்மையான நம் சரும நோய்களின் வேகம் அதிகரிக்கும்.

ஈ. அதிகமாக வெளிப்படும் வியர்வை காரணமாக மலச்சிக்கல், சிறுநீர்

எ. வயிற்றுப்போக்கு போன்ற வியாதிகள் (Acute Diarrohoeal Disorders) வந்து அவதிக்கு ஆளாக்கும்.

இவைகளெல்லாம் பொதுச் சுகாதாரக் கண்ணோட்டத்தில் முக்கியமாகக் கருதப்படக்கூடியவைகளாகும்.

**காக்கும் வழிமுறைகள்:**

எந்த ஒரு நோயோ, கோளாறோ ஆனாலும் சரி; அது வந்தபின் துன்பப்படுவதை விட, வருமுன் காப்பதே சாலச் சிறந்தது ஆகும். அந்த வகையில் கோடை வெய்யில் கொடுமை களிலிருந்து நம்மை நாமே பாதுகாத்துக்

கொள்ளச் சில வழிமுறைகளைக் கூறுவதும் என் கடமையாகும். அதாவது Do's and Dont's என்று ஆங்கிலத்தில் கூறுவார்களே... அப்படி.

★ வெயிலின் நேரடித் தாக்குதலுக்கு முடிந்தவரை ஆளாகாதிருங்கள். அதாவது குடை பிடித்துக் கொள்ளவோ, தொப்பி அணிந்து கொள்ளவோ வெட்கப்படாதீர்கள். தரமான கறுப்புக் கண்ணாடி (Cooling Glass) போட்டுக் கொள்ளவும் செய்யலாம்.

★ சிறியவர்களோ, பெரியவர்களோ, பருத்தித் துணியிலான உடைகளையே அணியுங்கள்; அவைகளே வியர் வையை உறிஞ்சும். காற்றை உள்ளே புகவிடாத வகையைச் சேர்ந்த துணிமணிகளால் தைக்கப்பட்ட ஆடைகள் ஆரோக்கியக் குறைவையே உண்டாக்கும்.

★ உடலில், அல்லது, நமது தோலில் எவ்விதக் கெடுதலும் நேராமல் இருக்க வேண்டுமானால், தினசரி காலையில் ஒருமுறை - மாலையில் ஒருமுறை சுத்தமான குளிர்ந்த நீரில் குளிக்கலாம்.

> **மனம் திறந்து கலகலவெனச் சிரியுங்கள். மனம் போராட்டங்களோடு போராட இன்று ஆற்றல் பெறுவீர்கள்.**
>
> **– ஷெல்லி**

வெந்நீரில் குளித்துத்தான் பழக்கமா? சரி, அதையாவது செய்யுங்கள்.

★ நீர்மோர், நீராகாரம், பழச்சாறு, இளைநீர் நிறைய அருந்துவது நல்லது. குறைந்தது ஒரு நாளைக்கு இரண்டு லிட்டர் அல்லது இரண்டரை லிட்டர் தண்ணீர் ஒவ்வொருவரும் குடித்தே ஆகவேண்டும்.

இந்த முறைகளையெல்லாம் கடைப்பிடித்தீர்களேயானால், கோடை கால நோய்கள் அல்லது வெய்யில் காலச் சீர்கேடுகளிலிருந்து நிச்சயம் நீங்கள் தப்பலாம்.

கோடையிலே இளைப்பாறிக்கொள்ள வகை கிடைத்த குளிர்தருவாய், தரு நிழலாய் நிழல் கனிந்த கனியாய், என்னுடைய ஆலோசனைகள் நிச்சயம் எல்லோருக்கும் பயன்படும் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கிறது.

## மிதக்கும் நகரங்கள்

உலகத்தில் மிதக்கும் நகரம் என்று வெனிஸ் நகரைக் குறிப்பிடுவார்கள். இதற்குக் காரணம் வெனிஸ் நகரில் சாலைகளே கிடையாது. அதற்குப் பதிலாகக் கால்வாய்கள்தான் உள்ளன. கார்களுக்குப் பதிலாக இங்கே படகு போக்குவரத்தே நடைபெறுகிறது.

இனி 21-ஆம் நூற்றாண்டில் உலகின் பல நகரங்கள் வெனிஸ் நகரத்தைப் போலவே மிதக்கும் நகரங்களாக இருக்கும் என்று ஜப்பானியக் கட்டிடக்கலை நிபுணர் ஒருவர் கூறியுள்ளார்.

வருங்காலத்தில் மனிதர்களே செயற்கையாக கடலில் மிதக்கும் நகரங்களைக்கட்டி விடுவார்கள் என்று இவர் குறிப் பிட்டுள்ளார். ஜப்பானில் ஏற்கெனவே மிதக்கும் விமான நிலையம் உள்ளது.

சென்னை நகரத்தின் வரலாற்றில் இதுவரையில் கோடையில் இவ்வளவு மழை பெய்ததேயில்லை என்று சொல்லும் அளவுக்கு ஒரு பெரும் மழையை கண்டது அப்போது நகரின் பெரும்பாலான சாலைகளில் மழை வெள்ளம் பெருக் கெடுத்து ஓடி சென்னை நகரமா இல்லை வெனிஸ் நகரமா என்ற தோற்றத்தை வெளிப்படுத்தியது.

> **நோய், குதிரையின் வேகத்தோடு நம்மை வந்தடைகிறது. ஆனால், போகும் போதோ பேன் போல் மெதுவாக குணமடைகிறது.**
>
> **– சிந்திப் பழமொழி**

## திரைப்படத்தொழிலாளர்:

# முதல்வரின் முயற்சி வெற்றி!

## வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது


தமிழ்த் திரைப்படத் தொழிலாளர்கள் வேலை நிறத்தம் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை 4.6.96 அன்று சென்னையில் நடைபெற்றது. அந்தப் பேச்சு வார்த்தையின்போது தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கப் பிரதிநிதிகளும், தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சங்கத்தின் (FEFSI) பிரதிநிதி களும் கலந்து கொண்டார்கள்.



முதலமைச்சர் அவர்கள்தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சங்கப் பிரதிநிதிகளின்இதுகாறும்கடைபிடிக்கப்பட்டு வந்த வேலைநேரத்தில் எந்த மாறுதலும் செய்யக் கூடாது என்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்ட முதல்வர் அவர்கள், சண்டைப் பயிற்சியில் ஈடுபடுபவர்கள் வேலைநேரத்தில் மட்டும் மாறுதல் செய்யக் கோரியிருந்ததை சுட்டிக்காட்டி அந்தப்பணியிலும்ஏற்கெனவேகடைப்பிடிக்கப் பட்டு வந்த வேலைநேரத்தை மேற்கொள்ளு மாறு வலியுறுத்தினார். அப்பொழுது சண்டைப் பயிற்சியைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் பணிபுரிந்தால் உயிருக்கு ஆபத்து நேரிடலாம் என்று அவர்கள் கருத்துத் தெரிவித்தபோது, சண்டைப் பயிற்சியின்போது யாரேனும் உயிரிழக்க நேரிட்டால் தமிழக அரசு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் அன்னாரது குடும்பத்தாருக்கு அளிக்கும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் சண்டைப் பயிற்சியின் வேலை நேரத்தில் மாறுதல் செய்வதில்லை என்ற உறுதிமொழியைத் தென்னிந்தியத்திரைப்படத்தொழிலாளர்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.


ஊதிய உயர்வு மற்றும் பணிகள் குறித்த ஒப்பந்தத்தில் தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சங்கம் மற்றும் தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சங்கம் ஆகியவற்றோடு தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், தெலுங்குத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், கன்னடத் திரைப்படத்தயாரிப்பாளர்கள் சங்கம், மலையாளத் திரைப்படத் தயாரிப் பாளர்கள் சங்கம் ஆகியவற்றைச் சார்ந்த பிரதிநிதிகளும் தமிழ்நாடு அரசு முன்னிலையில்



கையெழுத்திடுவது என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏதேனும் பிரச்சினைகள் எழுந்தால் தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சங்கம், சம்பந்தப்பட்ட மொழித் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத்துடன் கலந்துபேசி தீர்த்துக் கொள்வது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

ஊதிய உயர்வு குறித்த பிரச்சினை சம்பந்தமாக இன்னும் சில நாட்களில் இறுதி முடிவெடுக்கப்படும் என்றும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர் சங்கத்தினர் தங்கள் வேலைநிறுத்தத்தை உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொண்டு 5.6.96 அன்று பணியில் ஈடுபடுவதற்கு ஒத்துக் கொண்டார்கள். திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருடைய பிரச்சினை களையும் சுமார் 4 மணிநேரம் பொறுமையாகக் கேட்டறிந்து பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்து வைத்ததற்கு அனைத்துத் தரப்பினரும் தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத்தங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தி, விளம்பரத் துறை அமைச்சர் திரு.வ. முல்லை வேந்தன், செய்தி, சுற்றுலாத்துறைச் செயலாளர் திரு. நா. ஆதிமூலம், செய்தி மக்கள்தொடர்பு இயக்குநர் திரு.வி. இறையன்பு ஆகியோர் பங்கேற்றனர்.



**வால்** நட்சத்திரம் என்பது சின்னஞ்சிறு கற்களும், பனிக்கட்டிகளும், தூசிகளும் கொண்டு உருவான வைகளேயாகும். கற்கள் நிறைந்த இதன் தலைப் பகுதியே 'நியூக்ளியஸ்' எனப்படுவது. பூமியும் கிரகணங்களும் போல இவைகளும் சூரியனைச் சுற்றுகின்றன. சிறிய வால் நட்சத்திரங்கள் 3 ஆண்டுகளில் சூரியனைச் சுற்றும்; ஹேளி வால் நட்சத்திரம் 70 ஆண்டுகளில் சூரியனைச் சுற்றும். ஆயிரக்கணக்கான ஆண்டு களில் இப்படி பூமியைச்சுற்றும் வால் நட்சத்திரங் களும் உண்டு.

●●●

**ஆங்**கிலேயர்களும் பிரஞ்சுக்காரர்களும் வந்த பிறகுதான் நம் இந்திய நாட்டில் அச்சடிக்கும் முறை ஏற்பட்டது. 1556ல் கோவாவில் அச்சடிக்கும் முதல் இயந்திரம் உருவாக்கப்பட்டது. அதன் மூலம் அச்சிடப் பட்ட 'டாக்டரினா கிரிஸ்டம்' என்ற பிரஞ்சுப் புத்தகம் அதற்கு அடுத்த ஆண்டே வெளியிடப் பட்டது. 1558ல் அதையே 'தம்பிரான் வணக்கம்' என்ற பெயரில் வெளியிட்டார்கள்; இதுவே இந்திய மொழியான தமிழில் வெளிவந்த முதல் நூலாகும். 1780ல் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹக்கி என்ற ஆங்கிலேயர், கல்கத்தாவிலிருந்து, 'பெங்கால் கெசட்' என்ற செய்தித்தாளை வெளியிட்டார். இதனாலேயே அவரை 'இந்திய இதழியலின் தந்தை' என்று குறிப்பிடுவார்கள்.

●●●

**கம்**ப்யூட்டர் தயாரிப்பில் முன்னணியில் உள்ள ஐ.பி.எம். நிறுவனத்தார், எழுத்து மூலம் மட்டுமல்ல; பேச்சு மூலமும் கம்ப்யூட்டர் உதவி யால் தொடர்பு கொள்ளலாம் என்கிறார்கள். பேசும் வசதியோடு 'ஆப்டிவா' வகை சிறப்புக் கம்ப்யூட்டர்களில் இவ்வாறு பேசும் வசதியையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள் அவர்கள்.


●●●

**லண்**டனில் உள்ளசர்பெஞ்சமின் ஹாலில் உள்ள 'பிக்பென் கடிகாரக் கோபுரத்தின் உயரம்காண் 374 படிகளில் ஏறிச்செல்ல வேண்டும். ரோமானிய எண்களோடு உள்ள இதன் பெண்டுலம் மட்டும் 13 அடி உயரம். அதில் உள்ள ஒவ்வொரு ரோமானிய எழுத்தும் 2 அடி நீளம். ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை ஒலி எழுப்பும் இந்தக் கடிகாரத்தை 131/2 எடை கொண்டதாக உருவாக்கியவரே சர் பெஞ்சமின் தான். அவர் பெயராலேயே உள்ள இக் கடிகாரத்திற்கு வாரம் இரண்டுமுறை சாவி கொடுக்க வேண்டும். இதன் மணியோசை இங்கிலாந்தின் பி.பி.சி. மூலம் ஒலி பரப்பாகிறதாம்.

●●●

**அ**றிவியலில் உலகம் முழுவதற்குமாக ஓர் அளவை முறை தேவை எனக் கருதப்பட்டு, அதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டது. அவர்கள் கூறிய ஆலோசனைப்படி 1960 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச அளவை 'SI Units' முறை என்பதாகும்; அதன் விரிவாக்கம் Systeme International d' Units.

# அறிவியல் துளிகள்



# புழுதிக்கோயில்



பஜனை, பூஜனை, சாதனை, ஆராதனை
யாவையும் விட்டொழி:

கதவடைத்த கோயிலுள்ளே
யாரைத் தேடி நீ அலைகின்றாய்?

இருளில் புகுந்து உன் மனத்துள்ளே
யாரைக் குறித்து வழிபடுகின்றாய்

கண்ணைத் திறந்து நன்றாகப் பார்:
கடவுள் உன் இல்லத்திலும் இல்லை:

உழவர் உழன்று பயனைக் காணும்
வயல் வெளியில் வாழ்கின்றார் அவர்.

உடல் வருந்தக் கல்லை உடைத்தே
பாதை அமைப்போரிடமே பார் அவரை:


வெயில் மழையிலும் இந்த எளியவருடன்
புழுதியில் அவர் பணி செய்வதைக் காண்:

உனது தூய ஆடையைக் களைந்து எழுந்து வா!
அவரைப் போல், புழுதியில் நீயும் உழலடா!
விடுதலை! எங்குளது விடுதலை?
விடுதலை என்பது எது?
இறைவன் தன் படைப்பில்
கட்டுண்டு இருப்பதைப் பார்:
தியானத்தைக் கட்டி வை;
பூக்குடலையை ஒதுக்கிடு!
கிழிந்து கந்தலாகட்டும் உனது ஆடை!
தூசு படிந்து அது அழுக்கு ஏறட்டும்.

தொழில் புரியும் அவருடனே நீயும்
ஒன்றியே உழைத்திடுவாய்;
நெற்றி வியர்வை
நிலத்தில் சொட்டப் பாடுபடு.

– இரவீந்திரநாத் தாகூரின்
கீதாஞ்சலியிலிருந்து.
*(11 ஜூலை, 1910)*

# காது குடையும் சிறகு



**த**மிழுக்கு ஜப்பானிய ஹைகூ வடிவத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதற காக நான் பிரச்சாரம் செய்தேன்.

அந்தப் பிரச்சாரம் பயனைத் தந்தது. இருபதுக்கும் மேற்பட்ட ஹைகூ தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன. எந்த இதழைப் பிரித்தாலும் அதில் ஹைகூ இருக்கிறது.

இது ஒரு புறம் எனக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும் வேறொரு வகையில் வருத்தத்தையும் தருகிறது.

ஹைகூ என்ற பெயரில் வருவதெல்லாம் ஹைகூவாக இல்லை என்பதுதான் என் வருத்தத்திற்குத் காரணம்.

பெரும்பாலோர் ஹைகூ என்பதை வெறும் மூன்றடி விவகாரமாக நினைத்துக் கொண்டார்கள்.

மூன்றடி யாப்பு வடிவத்திற்காக நாம் ஹைகூவிற்குப் போக வேண்டியதில்லை. தமிழிலேயே சிந்தியல் வெண்பா, வெண்பாழிசை, ஆசிரியத் தாழிசை என்ற மூன்றடி யாப்பு வடிவங்கள் உள்ளன. ஏன், இவற்றை விடச் சிறிய குறள் என்ற இரண்டடி வடிவமே இருக்கிறது.

***பிறகு எதற்கு ஹைகூ?***

மூன்றடி என்பது ஹைகூவின் ஒரு பண்பு தான். ஹைகூவின் சிறப்புக்கு அது மட்டுமே காரணம் அல்ல. அதற்குள்ள மற்றப் பண்புகளே உலக யாப்பு வடிவங்களுள் ஹைகூவை உயர்த்திப் பிடிக்கின்றன.

மூன்றடி என்பது ஹைகூவின் புற வடிவம். ஒரு நல்ல கவிதைக்குப் புற வடிவம் மட்டும் போதாது. அக்வடிவமும் (Inner form) வேண்டும்.

ஹைகூவிற்கு அக வடிவமும் உண்டு. அரூபமான கருத்துகளையோ, உணர்வு களையோ வருணிக்காமல் எதையும் படிமமாகக் காட்சி வடிவப்படுத்திக் காட்டுதல், கவிஞன் தான் அடைந்த உணர்ச்சிகளைத் தானே விவரித்துக் கொண்டிராமல், அந்த உணர்ச்சி களை வாசகன் உள்ளத்தில் ஏற்படுத்தக் கூடிய காட்சிகளை, நிகழ்வுகளை மட்டும் சொற்களில் படம் பிடித்துக் காட்டுதல், வேகத்திற்காகவும் செறிவுக்காகவும் தொடர்புச் சொற்களை நீக்கிவிட்டு உயிர் நாடியான சொற்களை மட்டும் கையாளும் அவாய்நிலை (ellipsis) நடையைப் பயன்படுத்தல் போன்றவை ஹைகூவின் அக வடிவத்தை ஏற்படுத்துகின்றன.

மேலும் ஹைகூவின் உள்ளடக்கத்திற்கும் கூட மரபு வழிப்பட்ட இலக்கணம் உண்டு. (சங்க கால அகப் பொருள் கவிதைகளுக்கு உள்ளடக்க இலக்கணம் இருந்ததை இங்கே நினைவுபடுத்திக் கொள்ளலாம்).

ஹைகூ பெரும்பாலும் ஸென் (ZEN) புத்த மதத் தத்துவத்தின் அடிப்படையில் உதிக்கிறது.

இருத்தல் (existence) என்பது நிரந்தரமான, எல்லையற்ற மகா சமுத்திரம், பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு பிராணியும் இந்த மகா சமுத்திரத்திலிருந்து எழுகின்ற தற்காலிக வெளிப்பாடுகளே.

- அப்துல்ரகுமான்

படைக்கப்பட்ட அனைத்தும் - சிகரம் உயர்த்தி நிற்கும் மலையிலிருந்து சிறிய மலர் வரை, அழகான பெண்ணிலிருந்து அற்பப் புழுவரை - ஒன்றோடு ஒன்று உறவுடையவை; சரிசமமான அந்தஸ்துடையவை என்பது ஸென்னின் அடிப்படைத் தத்துவமாகும்.

காணும் ஒவ்வொரு காட்சியும், நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் இருத்தலைப் பற்றிய உண்மையை உணர்த்தும் குறியீடுகளாகவே இருக்கின்றன.

உள்நோக்குடைய கவிஞன் பார்வையில் இந்தக் காட்சியும், நிகழ்ச்சியும் மின்னல் வெட்டுவதுபோல் மின்னி ஒளியை உண்டாக்குகின்றன.

இந்த ஒளியைத்தான் ஹைகூக் கவிஞன் வாசகனுக்கும் பரிமாற விரும்புகிறான்.

உதாரணத்துக்கு சோஷு எழுதிய ஹைகூவைப் பார்ப்போம்.

*நீரில் நிலா*
*மீண்டும் மீண்டும் உடைகிறது*
*ஆனாலும் அங்கேயே இருக்கிறது.*

சலனமில்லாத நீரில் நிலாவின் பிம்பம் பிரகாசிக்கிறது. காற்றடிக்கும் போதெல்லாம் அலையெழுந்து பிம்பம் சுக்கல் சுக்கலாக உடைகிறது. அலை ஓய்ந்ததும் துண்டுகள் இணைந்து மீண்டும் நிலா பிரகாசிக்கிறது.

படைப்பு இப்படித்தான் நிகழ்கிறது. ஆயிரம் மலர்கள் மலர்கின்றன. வாடி உதிர்கின்றன. மீண்டும் மலர்கின்றன.


ஆயிரக் கணக்கான மனிதர்கள் பிறக்கிறார்கள். மடிகிறார்கள். மீண்டும் பிறக்கிறார்கள்.

உடைவது நிலாவின் பிம்பம்தான். நிலா அல்ல. அது எப்போதும் உடையாமல் அப்படியே இருக்கிறது.

மலர்களும், மனிதர்களும் நிலாவின் பிம்பங்களே.

மலர்கள் மலரலாம்; உதிரலாம். மலரின் மூலம் அப்படியே இருக்கும்.

மனிதர்கள் பிறக்கலாம். இறக்கலாம். மனிதனின் மூலம் அப்படியே இருக்கும்



இன்னொரு வகையிலும் இது அர்த்தப் படுகிறது.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் சத்தியத்தின் பிம்பம் பிரகாசிக்கிறது. அவன் மனம் சலனப்படும்போது அந்த பிம்பம் உடைந்து சிதறுகிறது. மனம் நிச்சலனமடைகிறபோது மீண்டும் சத்தியம் பிரகாசிக்கிறது.

ஒரு 'சாதாரண'க் காட்சி இவ்வளவு அர்த்த அலைகளை எழுப்புகிறது. இதுதான் ஹைகூ வின் மகத்துவம்.

ஸென் பார்வையில்தான் நாமும் ஹைகூ எழுத வேண்டுமா? என்று கேட்கலாம். தேவை இல்லை.

ஆனால் நாம் காட்டும் காட்சி அல்லது நிகழ்ச்சி இயற்கையைப் பற்றி, மனிதனைப் பற்றி, வாழ்க்கையைப் பற்றி ஓர் அரிய உண்மையை உணர்த்துவதாக, வாசகன் உள்ளத்தில் ஒளியேற்றுவதாக இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் ஹைகூ எழுத வேண்டிய அவசியமில்லை.

உள்ளொளி ஏற்படுத்தும் படிமக் காட்சி திட்பம், நுட்பம் போன்ற புதுக்கவிதைப் பண்புகள் ஹைகூவில் இருப்பதைப் பார்த்து வியந்தே உலக மொழிகளெல்லாம் அதை வரவேற்று ஆசனம் தந்திருக்கின்றன.

மேலை நாட்டுப் புதுக்கவிஞர்கள் ஹைகூ விடமிருந்து நிறையக் கற்றுக்கொண்டார்கள். நாமும் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஹைகூ ஒரு சிறகு. அதைக் காது குடைவதற்குப் பயன்படுத்தக் கூடாது.

# கடைசி மழைத்துளி

அறிவுமதி

- உடையும் அணைகள்
  மனிதர்கள் இல்லை
  காட்டின் வேர்கள்

- வறண்ட ஆறு
  காலடித் தடங்களில்
  சிலந்தி வலை

- பெருகத்தான் செய்யும் வன்முறை
  கேட்கிறதே
  மரம் வெட்டும் சப்தம்

- வயலிலுமா விளையாடின மீன்கள்
  வயலையே விளையாடுகின்றன
  இறால்கள்

- ஈரமற்ற நிலம்
  வெடிப்பில் கிடக்கிறது
  கொக்கின் பிணம்

- கிளை கிடைக்காத சோகம்
  அமந்தது புறா
  கல்லறைச் சிலுவை

- இறந்த இராணுவ வீரன்
  மனைவியிடம்
  ஒப்படைக்கப்பட்டது
  பாதி எழுதிய கடிதம்

- மேகம் விலக்கிப் பார்த்தது
  பௌர்ணமி
  புகைக்குள் தாஜ்மகல்

- எங்கும் புகை
  குழந்தைக் கனவுகளிலும்
  கறுப்புத் தேவதைகள்.

- மரம் வெட்டிய கோடரி
  பார்த்துக் கொள்
  கடைசி மழைத்துளி

- வீட்டிற்குள் குரோட்டன்சுகள்
  தொட்டிக்குள் மீன்கள்
  வானம் தொலைத்த நகரம்

- தோல் தொழிற்சாலை
  அழுகல் நீர்
  மூச்சுத் திணறும் நிலா

- ஆழம் குறையும் கடல்
அகலம் சுருங்கும் வானம்
எப்படிப் பிழைக்கும் வாழ்க்கை

- மரக் கிளையில் குழந்தை
வரப்பில் பண்ணையார்
பயிரில் சிந்துகிறது பால்

- கொதிக்கிறது உலை
சாணிக்குள் தேடுகிறாள்
செறிக்காத சோளம்

- மரவியாபாரி பார்க்கிறான்
வேர்முதல் கிளைவரை
குருவிக்கூடு நீங்கலாக



நகர்ப்புற ஏழைகள் அடிப்படை வசதிகள் திட்டம்

# பயன்களை மக்களே பெற்றிட பயிற்சி கொள்ளும் களம்!

ஆர். வேலு, இ.ஆ.ப.


நகராட்சி இயக்குநர் – நகராட்சி நிர்வாகம்

மழை பெய்கிறது!
அது

'அன்று பிறந்த' பறவைக்குஞ்சின் வாய் போல்
நீருக்காக வாய் பிளந்து நிற்கும்
விதைக்காக விழ வேண்டும்.

காற்று வீசுகிறது!
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் சூரியனுக்கு முதுகு காட்டி
உழவுகட்டிகளில் அல்லாடி, உழைத்துக் களைத்து
முற்றத்தில் முழங்கால் கட்டி இளைப்பாறும்
உழவனுக்காய் வீச வேண்டும்.

எண்ணற்ற நலத்திட்டங்கள்,
ஏழை எளியவர்க்கான அறிவிப்புகள்
இந்தக் காற்றுப் போல், மழை போல்
வீசினால்,
அது மக்களுக்கு வரப் பிரசாதம்.



நகர்ப்புற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்,
கல்வி, சுகாதாரம், சுற்றுச் சூழலை மேம்படுத்துதல்,
மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல்
இவை போன்ற இலக்குகளைக் கொண்ட
''நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதித்திட்டம்''
ஒரு வரப்பிரசாதம்தான்.


இத்திட்டம் ஒரு வரப்பிரசாதம் மட்டுமல்ல,
இதைச் செயல்படுத்துகிறவர்கள் மக்களாக இருக்கிறார்கள்.
அதிகாரம் மேலிருந்து கீழே பாய்கிற போது.
அது மக்களை எரிச்சலடையச் செய்கிறது.
இங்கே,
அடிமட்டத்தில் வாழும் மக்கள் கையிலேயே
அதிகாரம் தரப்படுகிறது.

என்ன கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை
மக்கள் அறியச் செய்வது,
எங்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என அறிந்து,
மக்களை எடுத்துக் கொள்ளச் செய்வது
இத்திட்டத்தில் உரத்து ஒலிக்கும் நாதம்.

செயல், சாதனை என்பவை
தனிமனித முன்முயற்சியால் தூண்டடப்படலாம்.
ஆனால் அவை
கூட்டாக இயங்கும் மக்கள் ஆற்றலின் வெளிப்பாடுகள்.
தனி மனிதனால் அல்ல;
அமைப்பாக இயங்குகிறபோது மட்டுமே,
சாதனை விளைகிறது.

மக்கள் தங்களையே
ஒரு அமைப்பாக்கிக் கொண்டு
பயன்கள் தங்களையே வந்தடையப்
பயிற்சி கொள்ளும் களமக
இத்திட்டம் விளங்குகிறது

நகர்ப்புற ஏழை மக்களை ஓர் அமைப்பாக்கி,
அந்நியப்பட்டு நிற்கும் அரசமைப்புகளிடமிருந்து
அவர்களுக்குரியதை அவர்களே பெறவும்,
அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை
அவர்கள் வாழும் இடங்களிலேயே வழங்கவும்
உருவானதுதான் இந்தத் திட்டம்.



உலகமெல்லாம் நாடுகள், நாடுகளிளெல்லாம் நகரங்கள்;
நகரங்கள், ஊர்களிலெல்லாம் வீதிகள்
வீதிகளெங்கனும் வீடுகள்,
வீடுகளின் ஒரு மூலையில் சமையலறை.

உலகத்தில் சரிபாதியாய்,
உலக உருண்டையை முழுமையாய்,
தன் பங்களிப்பினால் இயக்கிக் கொண்டிருக்கிற
பெண்
உலகத்திலிருந்து, சமையலறை மூலைக்கு
விரட்டப்பட்டிருகிறாள்.

சமையலறை சுதந்திரக் காற்றை சுவாசித்ததுண்டோ?
இரவிலே வாங்கினோம் சுதந்திரம்
விடிந்தது முதல் இரவு வரை,
சுத்நதிரக் காற்று என்ன சுத்தக் காற்றே
தவழாத மூலைச் சமையலறை

இத்திட்டத்தை,
மக்களுக்காகக் கொண்டு சென்று
மக்களால் நடத்த வழி செய்த,
மக்களுடையதாக்கி வெற்றி கண்ட
அலுவலர் சொல்கிறார் :

''இது இன்னொரு சோதனைக் கூடமே''

அவர் சொல்வதைக் கேளுங்கள்:
''எண்ணற்ற நலத்திட்டங்கள், ஏழை மக்களுடைய வாழ்வை மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் உரியவர்களை முழுமையாகச் சென்றடைந்து, தேவையான மாற்றத்தை விளைவிக்க விழிப்புணர்ச்சியும் சிறப்பாக செயல்படுகின்ற திறனும் தேவைப்படுகின்றன. தங்களை ஒரு அமைப்பாக மாற்றிக் கொண்டு அரசு திட்டங்களுடைய முழுமையான நோக்கத்தைக் கருத்தில் கொண்டு என்னென்ன செய்ய வேண்டுமென்பதை வேண்டிய விகிதத்தில் விதைக்க வேண்டுவது திட்டத்தை செயல்படுத்துபவருடைய முக்கிய நோக்கமாகும்.

சேதாரமின்றி அத்தனைப் பயன்களையும் பெற்றுக் கொள்வதற்கு, அவர்களை சுயமாகத் தயார்படுத்திக் கொள்வதற்கு நிறைய முன்னேற்பாடுகள் தேவைப்படுகின்றன. தங்கள் உரிமைகளைத்தாங்களாக வென்றெடுக்க அடிப்படைப் பயிற்சி அத்தியாவசியமாகின்றது.''

ஆம்!

இத்திட்டத்தில் தங்களுடைய உரிமைகளைத் தாங்களாக வென்றெடுக்கும் பயிற்சி தரப்படுகின்றது.

மக்களை ஈடுபடுத்தி, திட்டப் பணிகளை நிறைவேற்ற முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.


குறிப்பாக பெண்களை, முன்னேற்றத் திட்டப் பணிகளில் ஈடுபடுத்தி, இத்திட்டத்தை மக்களின் திட்டமாக ஆக்கப் பயிற்சி தருகிறது.



நகர்ப்புற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் வசதிகளையும் சுற்றுச் சூழலையும் அபிவிருத்தி செய்வதற்காகவே, இந்தச் சிறந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
மக்களை ஈடுபடுத்துதல் அத்துடன்
அவர்களை ஒருமுகப்படுத்துதல்,
மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு
அதிகாரம் வழங்குதல்,
முடிவெடுக்கும் திறமையை வளர்த்தல்,
பணிகளை ஒருமுகப்படுத்துதல்
ஆகியவைகளின் மூலம் பல்வேறு அரசாங்கத்திட்டங்களை திறம்பட செயல்படுத்தி, ஆங்காங்கே நகர்ப்புறச் சேரிகளிலும் மற்ற இடங்களிலும் வசிக்கும் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் முதன்மைக் குறிக்கோளாகும்.

செயல்படுத்தும் அமைப்பு முறை பாருங்கள்;
அது மக்களிலிருந்து தொடங்குகிறது.

உள்ளூர்க் குழுக்கள், உள்ளூர் முன்னேற்ற குழுக்கள்
உள்ளூர் கமிட்டிகள், சமுதாய முன்னேற்ற சங்கம் - என
ஊர்ப் படிக்கட்டுகளில் தொடங்கி
சமுதாய மையம்வரை செல்கிறது.



***உள்ளூர்க் குழு என்பது எது?***

குடிசைப் பகுதிகளில் 20-25 குடும்பங்கள் அடங்கிய சிறு சிறு குழுக்கள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு குழுவிலும் அந்தந்த குடும்பத் தலைவிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள். இவர்கள் அடிக்கடி சந்தித்து, தங்கள் பகுதியிலுள்ள (20-25) குடும்பங்கள் தேவைகள் மற்றும் பிரச்சனைகளைப் பற்றி விவாதித்து தீர்மானம் எடுப்பார்கள். ஒவ்வொரு 20-25 குடும்பங்கள் அடங்கிய உள்ளூர்க்குழுவில் எல்லோரிடம் பழகக்கூடிய தலைமைப் பண்புகளையுடைய, சமூகத் தொண்டில் ஈடுபடும் ஆர்வமும் உள்ள ஒருவரைத் தங்கள் தலைவியாகத் தேர்ந்தெடுப்பார்கள். இவர் உள்ளூர் சமுதாயத் தொண்டர் என்றோ அமைப்பாளர் எனவோ அழைக்கப்படுவார்.



***உள்ளூர் சமுதாயத் தொண்டரின் பொறுப்புகள் என்னென்ன?***

1. உள்ளூர்க் குழுவிலுள்ள குடும்பங்களுக்கு செய்திகளை அளித்தல்

2. குழுவிலுள்ள குடும்பத் தலைவிகளின் அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் உள்ளூர் கமிட்டி மற்றும் சமுதாய முன்னேற்றச் சங்கத்தில் தெரிவித்தல்

3. உள்ளூர்க் குழுக்களில் உறுப்பினர்களே திட்டப் பணிகளைத் திட்டமிட செயல்படுத்த மற்றும் மதிப்பீடு செய்ய ஆவன செய்தல்

4. சமுதாயத்தை முன்னேற்ற மக்கள் ஈடுபாட்டை ஊக்குவித்தல்





***உள்ளூர் கமிட்டி என்பது என்ன?***

சுமார் 10 உள்ளூர்க் குழுக்களை அதாவது 10 உள்ளூர் சமுதாயத் தொண்டர்களை (200 வீடுகள்) ஒருங்கிணைந்து, உள்ளூர்க் கமிட்டி அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு உள்ளூர்க் கமிட்டியிலும் இருக்கக்கூடிய ஒரு தலைவியைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.
இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர் அமைப்பாளர் என அழைக்கப்படுகிறார். இவர் உள்ளூர்க் கமிட்டியின் அலுவல்களை கவனிப்பார்.

உள்ளூர்க் கமிட்டியானது, தேவைகளுக்கு ஏற்ப, சிறு குழுக்களை அமைத்து ஒவ்வொரு சிறு குழுவும் ஆரம்பக் கல்வி, மருத்துவ வசதி சத்துணவு விளையாட்டு கலாச்சாரம் போன்ற பொறுப்புகளை நல்ல முறையில் செயல்படுத்தவும் கண்காணிக்கவும் செய்யும்.

***உள்ளூர் கமிட்டியின் பொறுப்புகள் எவையெவை?***

1. உள்ளூர் பிரச்சனைகளைக் கண்டறிந்து அவற்றை முக்கியப்படுத்துதல்

2. மக்கள் ஈடுபாட்டுடன் சமுதாயத் தேவைகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்

3. குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண பொறுப்பான நிறுவனங்களின் மூலம் உள்ளூர் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்தல்

4. திட்டத்தை திறம்பட செயல்படுத்தவும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் சம்பந்தப்பட்ட திட்டங்களுக்கு ஆலோசனை வழங்குதல்

5. சமுதாயத்தின் திறமையை வளர்க்கவும் மேம்படுத்தவும் சமுதாய அமைப்பாளர்கள் தனியார் சேவை நிறுவனங்கள் மற்றும் இதர துறைகளின் மூலம் பயிற்சி அளித்தல்

6. சமுதாய அளவில் கடன் வழங்கும் திட்டத்தை நடத்துதல்



***சமுதாய மேம்பாட்டுச் சங்கம் என்பது யாது?***

சமுதாய மேம்பாட்டுச் சங்கமானது, பொதுவான நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களுடன் வார்டு அல்லது நகரங்களில் உள்ளூர்க் கமிட்டிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்த முனைகிறது.
இந்தச் சங்கத்தில், தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர்க்குழு மற்றும் உள்ளூர் கமிட்டியின் அமைப்பாளர் மற்றும் சமுதாய அமைப்பாளர்களும் தனியார் சேவை நிறுவன பிரதிநிதிகள், பல்வேறு துறை அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் தேர்தலில் வெற்றி பெற்ற பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

***சமுதாய மேம்பாட்டுச் சங்கத்தின் கடமைகள் யாவை?***


1. சமுதாயம் மற்றும் பல்வேறு துறைகளின் மனிதவளம் வசதிகள், திறமைகளை உபயோகித்து சமுதாய அளவிலான திட்டங்களைத் தீட்டுதல்

2. சமுதாய மேம்பாட்டு சங்கத்தின் அங்கத்தினர்களுக்குத் தேவையான பயிற்சித்தேவைகளைக் கண்டறிந்து அவற்றை நடத்துதல்

3. அனைத்து நிறுவனங்களையும் துறைகளையும் ஈடுபடுத்தி சமுதாயத்தின் தேவைகளை பூர்த்தி செய்தல்

4. அனைத்து சமுதாயத்தினருக்கும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றுதல்.

சிறிது, சிறிதாகப் பெண்களை சுயமாகத்
தொழில் செய்ய வைப்பதற்கும்
தங்களின் தேவைகளை தாங்களே நிறைவேற்றிக் கொள்வதற்கும்
அவர்களையே செயற்படுவர்களாக ஆக்குவது,
இத்திட்டத்தின்
உள்ளோடும் மையத் தண்டு ஆகும்.



பொருளாதாரத்தைத் தன்கையில் எடுத்துக் கொள்ளும் பெண்,
சமுதாய வளர்ச்சியோடு தன் காலடிகளைப் பதிக்கிற பெண்,
கொஞ்சம் கொஞ்சமாய் சமையலறையை மீறி வரலாம்,
சுதந்திரக் காற்றை நுரையீரல் விரிய
சுவாசிக்கலாம்.

ஆகையினால்,
''நகர்ப்புற ஏழைமக்களுக்கான
அடிப்படை வசதிகள் திட்டம்''
பெண்களுக்கும் ஒரு வரப் பிரசாதம் !

இத்திட்டத்தை
கடலூர், மயிலாடுதுறை, திண்டுக்கல்,
பழனி, ராஜபாளையம், போடி, விழுப்புரம்
போன்ற நகராட்சிகளில் செம்மையாகச் செயலாற்றி
வெற்றிபெற்றிருக்கிறார்கள்.
பெண்கள்
தங்கள் உரிமைகளைத் தாங்களே வென்றெடுத்திருக்கிறார்கள்.
தங்கள் பகுதிகளில் குடிநீர்க் குழாய்களைத்
தாங்களே அமைத்துக் கொள்கிறார்கள்.
ஒப்பந்தக்காரர்களைக் காட்டிலும் குறைவான மதிப்பீட்டில்
இங்கே சிறுசிறு திட்டங்களெல்லாம் நிறைவேறுகின்றன.

கன்னியாகுமரியில்
*12000 சுய உதவிப் குழுக்கள்*

***'நல ஒளி திட்டம்'***

மூலமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

**பெண்கள் விழிப்புணர்வு பெற்றால்**
**முன்னேறுவது குடும்பங்கள் மட்டுமல்ல**
**மொத்த சமுதாயமும்தான் !**


முதல்வரின் சங்கத் தமிழ்

# அன்பைச் சுமக்கும் அன்னச் சேவல்!

பேசுமொழி தமிழ்மொழி என்றதாலும் ; பேசியவர்
பிசிராந்தைப் பெருமகனார் என்றதாலும்
மாசு மருவின்றி இனி ஆட்சி நடக்குமென
மன்னன் உறுதிமொழி தந்ததோடு
தந்திட்ட மொழி தவறாது காத்திடவும் செய்தான்,
தரணியிலே தன்புகழ் பூத்திடவும் செய்தான்.

அறிவுடைநம்பிக்கோர் அறிவு விளக்காக அமைந்திட்ட
தெளிவுடைச் செந்தமிழ்ப் பேரொளியாம் பிசிராந்தை;





சோழநாட்டு வேந்தன் கோப்பெருஞ்சோழன்பால்
சொல்லாலே நெய்வதற்கு இயலாத அன்புதனைக் கொண்டிருந்தார்

கவிபுனையும் ஆற்றல், கற்றாரைப் போற்றுகின்ற பாங்கு,
புவியெங்கும் மெச்சுகின்ற கொடைத் திறம்,
கண்ணிமை போல் நாட்டுக்குக் காவல்,
தண்ணிலவை மிஞ்சுகின்ற தகையால் உள்ளம்;
கோப்பெருஞ்சோழனிடம் குடிகொண்ட இக்குணங்கள்
குளிர்புனல் இதயக் கவிஞரை ஈர்த்தது மிகவே!

பிறந்த இடமாம் பிசிர் எனும் ஊரில் – நிழல்
அடர்ந்த தோப்பில் நெறியுடைச் கவிஞர் ஒருநாள்;
ஆய்வுக்குரிய பல்பொருள் குறித்து – சிந்தனை
அசைபோட்டவாறு, ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்.
அப்போது அன்னச் சேவல் ஒன்று இறக்கைகள் விரித்து
ஆகாயவெளியிற் பறந்து செல்வதைக் கண்டார் புலவர்!
ஆருயிர் நண்பன் சோழனைக்குறித்துப் பாடலொன்று;
யாத்திடும் ஆசை நிறைவேற வேண்டுமென்று,
அன்னச்சேவலை மையமாய் வைத்து – அழகுறப்பாடல்
கன்னல் தமிழில் கற்பனையூற்றாய் எழுதினார் புலவர்!

''அன்னச் சேவலே! அன்னச் சேவலே!'' என அழைத்து
இன்னலுற்றுள்ள தன் நெஞ்சைத் திறந்து காட்டி.
மன்னவன் பெருங்கோ கிள்ளியெனும் கோப்பெருஞ்சோழனை
இன்னமும் காணும் வாய்ப்பினைப் பெறவில்லையே யென்ற
மனப்புயல் ஒருபுறம், இடக்கிக்கொண்டு – அவன்
மாப்புகழ்ப் பற்றி எடுத்துரைத்தார்!

கோக்காமல் முத்துக்கள் மாலையாவதில்லை – ஆனால்
பார்க்காமலே சோழனும் புலவரும் நட்பின் ஆரமாய்த் திகழ
தமிழே மணியாய் – தமிழ் உணர்வே இழையாய் ஆனதுவாம்!
தடந்தோள் சோழனின் கொடையும் அன்பும்
பாட்டின் கருவாய் அமைந்ததுவாம்!

''அன்னச்சேவலே! அன்னச்சேவலே! நீயோ
கன்னிக் குமரியின் மூலையிலேயிருந்து

அயிரைமீனைக் கொத்திய அலகுடன் – வெகு
உயரம் விண்ணில் பறந்தவாறு,

பனிமலை நிறைந்த வடக்கு திசைக்குப்
பயணம் செய்கிறாய்; நின் பயணம் வெல்க!

கடக்கும் வழியில் என் கண்மணிச் சேவலே! – பகை
அடக்கும் சோழன் தலைநகர் உளது!

கோழியூர் எனப்படும் உறையூர் நகரே – எனது
கோப்பெருஞ்சோழனுக்குரிய தலைநகர்!

மேழிச்செல்வம் கோழைபடாது எனும் கொள்கையுடனே
மேன்மையாய் நாட்டைக் காக்கும் மன்னவன்!

வலக்கரம் வழங்குவது இடக்கரம் அறியாமல்
வழங்கிடும் தென்னவன்!

வழியில் நீயும் நின் பெடையுடன் சென்றால் – சோழன்
விழியில் அன்பின் ஒளியினைக் காண்பாய்!

இடையில் எவரும் தடுத்து நிறுத்தினால்
பெடையுடன் நீயும் திரும்பிடல் வேண்டாம்!

இறைவனாம் சோழன் செவியில் விழுமாறு
உறையூர்க் காவலர்பால் உரக்கக் கூறிடு!


ஆந்தையார் எனும் புலவர் வாழ் பிசிர் எனும் ஊரைச்
சார்ந்தோர் நாங்கள் எனச் சாற்றுவாயாகில்;

அரசனே ஓடிவந்துமை வரவேற்று வாழ்த்தி
அணிமணி பலவும் நின் பேடைக் களிப்பான்!

ஏனெனில் அத்துணை நட்பு அவனுக்கென்னிடம் உண்டு
தேன் எனில் தெவிட்டிவிடும்;
இதுவோ
எம் இருவரிடை என்றுமே தெவிட்டாத நட்பு''

*''அன்னச் சேவல்! அன்னச் சேவல்!*
*ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல்*
*நாடுதலை அளிக்கும் ஒண்முகம் போலக்*
*கோடுகூடு மதியம் முகிழ்நிலா விளங்கும்*
*மையல் மாலை யாம் கையறுபு இணையக்,*
*குமரிஅம் பெருந்துறை அயிரை மாந்தி,*
*வடமலைப் பெயர்குவை ஆயின், இடையது*
*சோழநன் னாட்டுப் படினே, கோழி*
*உயர்நிலை மாடத்துக், குறும்பறை அசைஇ*
*வாயில் விடாது கோயில் புக்கு, எம்*
***பெருங்கோக்கிள்ளி கேட்க, 'இரும்பிசிர்***
*ஆந்தை அடியுறை' எனினே, மாண்ட நின்*
*இன்புறு பேடை அணியத், தன்*
*அன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே.''*

# தளிர்கள்...
# சில தகவல்கள்!



- உலகில் ஒவ்வொரு 10 பேரில் 3 பேர் 16 வயதிற்குட்பட்டவர்
- வளரும் நாடுகளில் 3-ல் ஒரு குழந்தை ஊட்டச் சத்துக் குறைவுடன் உள்ளது.
- உலகில் 20 குழந்தைகளுக்கு ஒரு குழந்தை கண்ணி வெடி உயிரிழப்பிற்குக் காரணமாகிறது.
- முன்னேறும் நாடுகளில் 1.3 பில்லியன் மக்கள் பாதுகாப்பான குடிநீருக்கு வழிவகையின்றி உள்ளனர். 1.9 மில்லியன் மக்கள் போதுமான கழிப்பிட வசதியற்றுள்ளார்கள்.
- முன்னேறும் நாடுகளில் 90% குழந்தைகள் பள்ளிகளில் சேர்ந்தாலும் 4 ஆண்டுகளில் இது 68% ஆகிவிடுகிறது.
- ஆயிரத்தில் 97 குழந்தைகள் ஐந்தாவது பிறந்தநாளைக் காணாது இறக்க நேரிடுகிறது.
- 10-ல் ஒன்பது குழந்தைகள் தேசியச் செயல் திட்டம் நடைமுறையில் உள்ள நாடுகளின் கீழ்வருகின்றனர்.
- முன்னேறிவரும் உலக நாடுகளில் 13 மில்லியன் குழந்தைகள் ஒவ்வொரு ஆண்டும் இறந்து விடுகின்றன. இதில் 3 மில்லியன் குழந்தைகள் டயோரியா, நிமோனியா போன்ற வியாதிகளால் இறக்கின்றனர்.
- 2000-ம் ஆண்டில் எய்ட்ஸ் நோயால் 10 மில்லியன் குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கும். இதில் 9 மில்லியன் குழந்தைகள் ஆப்ரிக்காவில் மட்டும் இருக்கும்.
- இந்தியாவில் 1990ம் ஆண்டுவாக்கில் ஆண் பெண் விகிதாச்சாரம் 1000 ஆண்களுக்கு 972 பெண்கள் என்ற அளவில் இருந்தது பின்பு 935 என்ற அளவில் குறைந்துவிட்டது. மணமான தம்பதியர் பெண் குழந்தைகளுக்கு பதில் ஆண் குழந்தைகளே வேண்டுமென விரும்பத் தொடங்கியதே இதற்குக் காரணம்.

### பாடநூல்கள் யாவும் பழைய விலையிலேயே விற்பனை

1996-97 ஆம் கல்வி ஆண்டிற்கு 344 தலைப்புகளில் 4.86 கோடி நூல்கள் அச்சிட்டு விநியோகம் செய்யப்பட வேண்டியிருந்தது. இந்நூல்களை அச்சிட்டு வழங்குவதற்குத் தேவையான தாள்/மேலட்டை மற்றும் அச்சுக் கூலி போன்றவற்றில் கடுமையான விலையேற்றம் இருந்தது. ஆயினும் பொதுமக்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் கல்வி நலன் கருதி, புதிதாக பொறுப்பேற்றுள்ள தமிழக அரசு இவ்வாண்டில் வெளியிடப்படும் பாடநூல்கள் யாவும் அவற்றுள் ஒரு சில அதிக பக்கம் கொண்டவையாயினும், எந்தவித விலையேற்றமுமின்றி பழைய விலையிலேயே விற்பனை செய்ய ஆணை வழங்கியுள்ளது.

தமிழக அரசின் இலவசப் பாடநூல்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெறும் சுமார் 63 இலட்சம் குழந்தைகளுக்கு 10-6-96 முதல் 20-6-96 தேதிக்குள்ளாக மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை) மற்றும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மூலமாக இலவசப் பாடநூல்கள் விநியோகம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### வறட்சி நிவாரண பணிகளுக்கு ரூ. 3.17 கோடி நிதி ஒதுக்கீடு

இருபத்தி மூன்று மாவட்டங்களில் உள்ள பேரூராட்சிகளில் கை பம்பு சுத்தப்படுத்துதல், குழாய்க் கிணறுகள் தொடர்களை நீட்டித்தல், குடிநீர் வழங்கும் குழாய் கிணறுகளை அமைத்தல், திறந்த வெளிக் கிணறுகள் அமைத்தல், அதோடு பழுதடைந்த குழாய் தொடர்களை மாற்றியமைத்தல், செயல்படாத மேல் நிலைத் தொட்டிகளை இயங்க வைத்தல் மற்றும் திறந்த வெளிக் கிணறுகள், வட்டக் கிணறுகள் அமைத்தல் மற்றும் 'மோட்டார் இயந்திரங்கள் வாங்குதல், அதோடு திறந்த வெளிக் கிணறுகளை ஆழப்படுத்துதல் முதலிய பணிகளுக்காக 2.14 கோடி ரூபாயும்.

வறட்சிப் பகுதியான புதுக்கோட்டை மாவட்டத்திற்கு சுமார் 23 இலட்சம் ரூபாயும் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்திற்குக் குழாய்களை நீட்டிக்க 80 இலட்சம் ரூபாயும் ஒதுக்கி ஆக மொத்தம் ரூ. 3.17 கோடி தொகையை வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்து ஆணையிட்டு, பணிகளை துரிதமாகச் செயல 'படுத்தும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்.

## செய்திச்சரம்

### பொள்ளாச்சியில் ரூ. 39 கோடி முதலீட்டில் தேங்காய் பதனிடும் தொழிற்சாலை

கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சிக்கருகில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், கூட்டுத் துறையில் 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கும் ஒருங்கிணைந்த தேங்காய் பதனப்படுத்தும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கல்கத்தாவிலுள்ள ராய் சுரானா நிறுவனங்கள் டிட்கோவுடன் இணைந்து இத்திட்டத்தில் பங்கீடு செய்ய உள்ளனர். சுவீடனைச் சேர்ந்த பங்குதாரர்கள் இத்திட்டத்திற்குத் தேவையான தொழில் நுட்பத்தை அளிப்பர். இத்திட்டத்தினால் 300 நபர்களுக்கு நேரடியாகவும், 1000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும். இத்திட்டம் வெகு விரைவில் செயல்படத் தொடங்கும்.

**செய்திச்சரம்**

### சாதிச்சான்றிதழ் பெறுவதில் இன்னல், இனி இல்லை

மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள தொட்டிய நாயக்கர் வகுப்பினரும் மற்றும் அதன் உட்பிரிவுகளான இராசகம்பளம், கொல்லவார், சில்லவார், தொக்கலவர், தொழுவ நாய்க்கர்வகுப்பினர்களும் சாதிச்சான்றிதழ்களை வட்டாட்சியர்களிடமிருந்து பெறவேண்டும் என்ற ஆணை தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து விரிவாக ஆய்வு செய்து மேற்குறிப்பிட்ட வகுப்பினர் சாதிச்சான்றிதழ் பெறுவதில் தற்போது அனுபவித்து வரும் இன்னல் களை நீக்கும்பொருட்டு இவ்வகுப்பினர் களுக்கு வட்டாட்சியர்களுக்குப் பதிலாக துணை வட்டாட்சியர்களே சாதிச் சான்றிதழ் வழங்கலாம் என்று ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

### திரைப்பட பணியாளர்களுக்கு உதவி

திரைப்படங்களில் சண்டைக் காட்சி களில் பணியாற்றும் பணியாளர்கள் படப்பிடிப்பின் போது உயிர் இழக்க நேர்ந்தால் அவர்களின் குடும்பத்திற்கு தமிழக அரசு, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 1 இலட்சம் உதவித் தொகையாக வழங்கும் எனவும் மற்றும் மேற்படி பணியின்போது காயம்பட்டவர்களுக்கு, மருத்துவச் சிகிச்சைக்கான செலவை அரசே ஏற்றுக் காள்ளவதோடு அக்காயத்தின் காரணமாக ஊனமுற்றாலோ, தொடர்ந்து தொழிலில் ஈடுபட முடியாவிட்டாலோ அவர்களுக்கு உதவி நிதியாக தமிழக அரசு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 50,000 வழங்கும் எனவும் தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### மதுவிற்பனை: வரிவிதிப்பு

இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகளுக்கு உற்பத்தியாளர்களிடம் இருந்து வசூலிக்கப்படும் வரி (Vend Fee) பெட்டி ஒன்றுக்கு ரூபாய் 45/- (நாற்பத்தைந்து ரூபாய்) என்பதை ரூபாய் 95/- (தொன்னூற்றைந்து ரூபாய்) என்று உயர்த்தப்படுகிறது. 'பீர்' எனப்படும் மதுவகைக்குத் தற்போதுள்ள வரி பெட்டி (Vend Fee) ஒன்றுக்கு ரூபாய் 4.50 என்றிருப் பதை ரூபாய் 10/- ஆக உயர்த்தியும் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்த உயர்வு காரணமாகச் சில்லறை விற்பனைவிலை உயர்த்தப்படமாட்டாது. தற்போதுள்ள சில்லறை விலையே தொடர்ந்து நீடிக்கும். இந்த உயர்வின் மூலம் நுகர்வோர்க்கு வாங்கும் விலை உயராமலே ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 65 கோடி ரூபாய், மேலும் அதிக வருமானம் அரசுக்கே கிடைப்பதற்கு தமிழ்நாடு அரசு வழிவகை செய்துள்ளது.

பொறுக்கமுடியவில்லை!

மறுபடி தொடங்கி விட்டது சாவித்திரியின் புலம்பல். களைப்பு கலந்த உச்சஸ்தாயிக்குரல். இனித் தாங்க முடியாதுப்பா! இந்தப் பாவி யமன் என்னைக் கொண்டு போக மாட்டேங் கறானே!...

எப்போது பார்த்தாலும் இந்தப் புலம்பல்தான்!

எப்போதும் யமனைச் சபித்துக் கொண்டு இருக்கிறாள் சாவித்திரி. தன்னால் சம்சாரச் சுமையைத் தாங்க முடிய வில்லை என்பதை உரத்த குரலில் எல்லோருக்கும் தெரி வித்துக் கொண்டே இருக்க வேண்டும் அவளுக்கு!

அம்மாவின் இந்தப் புலம் பலைப் பொறுக்க முடிய வில்லை ஜயந்தியால். அரு வருப்பாயிருக்கிறது அவளுக்கு. சாவித்திரியை ''அம்மா'' என்று அழைக்கக் கூடப் பிடிக்க வில்லை. இரண்டு வேளை உணவும் இரவில் படுக்க இடமும் தவிர வீட்டுடன் வேறு தொடர்பே இல்லாமல் போய்க் கொண்டு இருக்கிறது அவளுக்கு. கூடிய மட்டில் வீட்டில் தங்கும் நேரத்தைக் குறைத்துக் கொண்டு இருக்கிறாள் அவள்.

ஆனால் எப்படியும் நாள் முடிவில்வீட்டுக்கு வரத்தானே வேண்டும்! நாள் முழு தும் உழைத் துக் களைத்த உடலைத் தூக்கிக் கொண்டு படுக்கையில் வந்து விழுவாள்.



அப்போதே ஆரம்பமாகி விடும் சாவித்திரி யின் புலம்பல்.

இல்லையில்லை, புலம்பல் நாள் முழுவதும் தொடர்ந்து கொண்டுதானிருக் கிறது. ஜயந்தி இதுவரையில் வீட் டில் இல்லாத தால் அவள் காதில் விழ வில்லை. அவ்வளவு தான். நல்ல வேளை ஜயந்தி பெரும்பாலான நேரம் வீட்டில் இருப்ப தில்லை. இருந்தால் அவளுக்கும் பைத்தியம் பிடித்திருக்கும்.

ஒரு சிறிய குடும்பத்தை சமா ளிப்பது, அதிலுள்ளவர்களுக்குச் சாப்பாடு தயாரித்துப் போடுவது அவ்வளவு கஷ்டமான விஷயமா? எதற்கு இவ்வளவு எரிச்சல் படுகிறாள் அம்மா? வெளியே போய் வேலை செய்து

# காலாட்படை

## ஆஷா பூர்ணாதேவி



மௌனமாகஇருந்து இருந்தே குடும்பத்தி லிருந்து கொஞ்சங் கொஞ்சமாக அன்னியப்பட்டுக் கொண்டு இருந்தாள் ஜயந்தி. திடீரென்று மழைவந்து விட்டால் வெளியே கொடி யில் உலர்த்தி உள்ள துணிகளை எடுத்து வராமல் அவை மழையில் நனை வதைக் கவலை யின்றிப் பார்த்துக் கொண்டிருக்கத் தொடங்கி விட்டாள் நன்றாக நனையட்டும். ஜயந்திக்கு அவ்வளவு ஆத்திரம் அவளுடைய அம்மா மேல்.

அவளுடைய தம்பி, தங்கைகளின்நிலை மிகவும் பரிதாபம். அவர்களுக்கு உடுக்கத் தகுந்த துணிகள் இல்லை. தலை முடி ஒழுங்காக சீவப்படுவ தில்லை. சாப்பாடு சரியான நேரத்துக்குக் கிடைப்பதில்லை. நோய் நொடி என்றால் சரியானபடி சிகிச்சை இல்லை. சேரிக் குழந்தைகள் போல் சரியான கவனிப்பின்றி, அழுக் கும் புழுதியுமாகத் திரிந்து கொண்டு இருப்பார்கள்.

அப்பாவும் பெண்ணும் ஏதோ குற்றம் செய்தவர்கள் போல் சாப்பிட உட்காருவார் கள், அவர்களுக்கு ஆபீஸ் போக வேண்டுமே, அந்தச் சாப் பாட்டின் விமரிசையைக் கேட்கவே வேண்டாம். சோறும் பருப்பும் கிடைத்து விட்டால் அதுவே பெரிய காரியம். பாதி வெந்த சோற்றையும் பருப்பை யும் பரிமாறும் போது சற்றும் சங்கடப் படமாட்டாள் சாவித்திரி. மாறாக, இவ்வளவு சீக்கிரம் சமைத்துப்போடுவது எவ்வளவு சிரமம் என்பதை விலாவாரியாக விவரித்துத் தீர்ப்பாள். இவர்கள் இன்னும் கொஞ்சம் பொறுத் தால் கறி, கூட்டு, தயாரித்து இருப்பாளாம். ''நீங்கதான் இறக்கை கட்டிக்கிட்டு பறக் கிறீர்களே!'' என்று குற்றஞ் சாட்டுவாள்.

அதிகாலையிலேயே எழுந்து விடுகிறாள் சாவித்திரி. அதி காலை முதல் ஒன்பது மணி வரை நேரம் கொஞ்சமா? அதற்குள் கூட்டும் கறியும் சமைக்க முடியாதா? என்னதான் செய்கிறாள் இவ்வளவு நேரம்?

அம்மா எழுந்த வெகு நேரத்துக்கு பின் எழுந்தாலும் ஜயந்தி ஆபிஸ் போகுமுன் இரண்டு இடங்களில் டியூசன் சொல்லிக் கொடுத்து விட்டு வருகிறாள். அப்பா பிஜன் பாபுவுக்கும் டியூஷன் உண்டு. அத்துடன் கடைக்குப் போவது, ரேஷன்வாங்குவது அடுப்புக்கரி வாங்கி வருவது போன்ற வேலைகளையும் செய்து விடுகிறார்.

அப்பாவும் பெண்ணும் இவ்வளவு வேலை செய்தாலும், அம்மா மாதிரி யமனை அழைத்துக் கொண்டு இருக்க வில்லை!

அன்று வீட்டில் சாப்பிடக் கூடப் பிடிக்கவில்லை ஜயந்திக்கு.

அவள் வீட்டில் நுழைந்த போது சாவித்திரி கைக்குழந்தை யைக் கண்மண் தெரியாமல்

சம்பாதிக்கப் போனால், அப்போது அதன்கஷ்டம் புரியும்.

எவ்வளவு கடினமாக உழைக்க வேண்டியிருக்கிறது ஜயந்திக்கு! அம்மா என்ற முறையில் கூட வேண்டாம், ஒரு மனிதப் பிறவி என்ற முறை யிலாவது சாவித்திரி ஜயந்திபடும் கஷ்டத்துக்காக அனுதாபப்படக் கூடாதா? நாள் முழுவதும் உழைத்துச் சோர்ந்து போய் வரும் பெண்ணின் காது களைத் தாக்கும்படி இடை விடாமல் புலம்பாமல் இருக்கக் கூடாதா?

ஜயந்தி ஏதாவது சொல்லப் போனால் அம்மா ஓவென்று அழத்தொடங்கிவிடுவாள். ஆகை யினால் பேசாமலிருப்பதே மேல்.

அடித்துக் கொண்டு இருந்தாள். கூடவே தனக்கும் அந்தக் குழந்தைக்கும் சாவு வராதா என்று புலம்பிக் கொண்டு இருந்தாள்.

அந்தக் குழந்தை செய்த குற்றம் என்னவென்று ஜயந்திக்குத் தெரிய வாய்ப்பு இல்லை. பேச்சு இன்னும் வரவில்லை குழந்தைக்கு.

விவரம் தெரியாத ஒரு குழந்தையை ஒரு மனுஷி இப்படி ஈவிரக்கமின்றி அடிப்பாளா என்று வியந்து கொண்டே ஜயந்தி தன் படுக்கையில் போய் விழுந்தாள்.

சற்று நேரத்துக்குப் பின் அவளுடைய தங்கை மீனு ஒரு கோப்பை டீயை ஜாக்கிரதையாக அவளிடம் எடுத்து வந்தபோது ஜயந்தி, ''டீயை எடுத்துக்கிட்டு போயிடு! எனக்கு வேண்டாம்!'' என்று சொன்னாள்.

வேறு நாளாயிருந்தால் சாவித்திரி அவளிடம் வந்து ''டீ கொஞ்சம் குடியேன்!'' என்று கெஞ்சி இருப்பாள். அது இன்னும் எரிச்சல் மூட்டி இருக்கும் ஜயந்திக்கு. ஆனால் இன்று அப்படி ஏதும் நிகழவில்லை.

இன்று சாவித்திரி பயங்கர மூடில் இருந்தாள்.

படுத்திருந்தாலே தூக்கம் வந்து விடுமா? படுக்கையில் இருந்தவாறே ஜயந்திக்குக் கேட்கிறது சாவித்திரியின் கூக்குரல். குழந்தைகளின் அழுகை, சமையலறைக்குரிய ''சொய், சொய்'', ஒலிகள், சாவித்திரியின் உரத்த புகார்கள். யமனுக்கு எதிராக, கடவுளுக்கு எதிராக, கையால் ஆகாத கணவனுக்கு எதிராக,

## இக்கதையில் வெளிப்படும் வெளிச்சக் கீற்று...

''விடுதலைப் போரில், போரிட்டு, உணவுப் பொருட்களை, தளவாடங்களை போர்முனைக்குக் கொண்டு வந்து சேர்த்து, போரில் வெற்றி ஈட்டித் தந்த காலாட்படை வீரர்களின் துக்கம் தீர்ந்ததா? அவர்களுக்கு விடிவு ஏற்பட்டதா? வரலாற்றில் படைத் தலைவர்களின் பெயர்கள் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கும்; அவர்களது வீரத்தையும், நாட்டுப் பற்றையும் தியாகத்தையும் போற்றிப் பக்கம் பக்கமாக எழுதப்படும். ஆனால் போரில் பங்கு பெற்ற காலாட்படைக்கு வாழ்க்கைப் போரில் பங்கு பெற்ற காலாட்படைக்கு வாழ்க்கைப் போரில் தோல்விதான் மிச்சம்!''

இப்படிக் கூறுகிறார் ஆஷாபூரண தேவி, வங்க எழுத்தாளர்.

வரலாற்றில் மறைக்கப்படும், மறக்கப்படும் இந்தக் காலாட்படை வீரர்கள் யார்? தொழிலாளர்கள் மட்டும் தானா? கிராமப்புறங்களில் அவர்கள் விவசாயிகளாக இருக்கிறார்கள். விவசாய வீடுகளில் அவர்கள் பெண்களாக இருக்கிறார்கள். கணவனும் மனைவியும் வேலைக்குப் போகிற வீட்டில் மனைவி காலாட்படையாக இருக்கிறாள். கணவன், மகன் மகள் அனைவரும் வேலைக்குப் போகிற வீட்டில், தாய் காலாட்படையாக இருக்கிறாள்.

எப்படி யுத்தத்திற்குப் பின்னணியான, ஆதாரமான காலட்படைகளின் பங்களிப்பு மறைக்கப்படுகிறதோ, அப்படி இந்த மகத்தான சமூக இயக்கத்திற்குப் பெண்கள் என்ற காலாட்படை பங்கு இருட்டடிப்புச் செய்யப்படுகிறது என்பது இக்கதையில் வெளிப்படும் வெளிச்சக் கீற்று.

படித்த பெண்ணுக்கெதிராக மொத்தத்தில் உலகம் முழுமைக்கும் எதிராக...

''இந்தக் குடும்பத்திலே இவ்வளவு செலவு ஆகுது. எனக்கு ஒரு அஞ்சு பைசாவுக்குச் கயிறு ஒண்ணு வாங்கிக் கொடுக்கக் கூடாதா? நான் தூக்குப் போட்டுக் கிட்டு இந்த நரகத்திலேயிலிருந்து தப்பிச்சுக்குவேனே!... வாங்கிக் கொடுக்க மாட்டாங்க, ஏன்னா கடைசியிலே அவங்களையும் கயத்திலே கட்டி இழுத்துக் கிட்டுப் போயிடுவாங்களே!... அதுக்காகத்தான் இப்படி என்னை அணு அணுவாகக் கொல்றாங்க!...'' ''என்ன, அதுக்குள்ளே சோறு வேணுமா? போ, தொலைஞ்சு போ எங்கே யாவது!... அவ்வளவு ராட்சசப் பசியா இருந்தா என்

தலையையே கடிச்சு தின்னுடு! அவ்வளவு பசியுள்ளவ ஏன் இந்த ஓட்டாண்டிக் குடும்பத்திலே வந்து பொறந்தே?...

ஜயந்தியால் பொறுக்க முடியவில்லை.

அவள் எழுந்திருந்து தந்தையிடம் வந்தாள். ''அப்பா, என்னாலே பொறுக்க முடியல்லே இந்த நரக வேதனை! மனுஷன் இருக்க முடியுமா? இந்த வீட்டிலே?''

பிஜன்பாபு திகைத்துப் போய் மகளை நிமிர்ந்து பார்த்தார்.

''உங்க காது அடைச்சுப் போயிருக்குன்னு தோணுது.. ஆனா என்னாலே இந்த அனத்தலைக் கேட்டுக்கிட்டு இருக்க முடியல்லே. நான் இந்த வீட்டை விட்டுப் போக வேண்டியது தான்!...''

''பிஜன்பாபு வருத்தத்தோடு சொன்னார்.''ஆமாம்மா, அம்மாவோட குணம் நாளுக்கு நாள் மோசமாகிக்கிட்டு இருக்கு, ஆனா அவளையும் குத்தஞ் சொல்ல முடியாது. வீட்டு வேலைப் பளு ரொம்ப ஜாஸ்தி, வேலைக்காரி போனதிலேயிருந்து...''

''குடும்பத்துக்கு ரெண்டு வேளை சோறும் பருப்பும் வேக வைச்சுப் போடறது என்ன அவ்வளவு சிரமமா? உழைக்காம யாரு சோறு திங்கறாங்க? அனத்தலுக்கும் புலம்பலுக்கும் எல்லை கிடையாதா? அம்மா என்ன பைத்தியமா?''

''வாஸ்தவந்தான் அம்மா. எல்லை மீறித்தான் போகுது இவ நடத்தை... ஆன நான் என்ன பண்ணுவேன்? இவகிட்டே ஏதாவது சொல்லப் போனா குருஷேத்திரம் தொடங்கிடும்..''

''நானும் அதுக்காகத்தான் சும்மா இருக்கேன் அப்பா. இதுக்கு ஏதாவது ஏற்பாடு செய்யத்தான் வேணும்!''

''என்ன ஏற்பாடு செய்ய முடியும் இந்த மூதேவி சாகலேன்னா? அவர்களுக்குப் பின்னால் வந்து நின்ற சாவித்திரி சொன்னாள், நான் என்ன செய்வேன்? அந்தப் பாழும் யமனைக் கூப்பிட்டுக்கிட்டுத் தான் இருக்கேன் வரமாட்டேங்கறானே பாவி!''



**...சாவித்திரியின் உரத்த புகார்கள், யமனுக்கு எதிராக, கடவுளுக்கு எதிராக கையாலாகாத கணவனுக்கு எதிராக, படித்த பெண்ணுக்கு எதிராக, மொத்தத்தில் உலகம் முழுமைக்கும் எதிராக.**

தாயின் இந்த சண்டைக் குணத்தை பார்த்து எரிச்சலும் அருவருப்பும் ஏற்பட்டது ஜயந்திக்கு. அவள் அம்மாவை முறைத்துப் பார்த்து விட்டு பேசாமல் அங்கிருந்து நகர்ந்தாள்.

சாவித்திரி அவளைப் பார்த்துக் கேட்டாள், ''ஏன் சாப்பிட மாட்டேங்கறே?''

''இந்த வீட்டுச் சோத்தை திங்கப் பிடிக்கல்லே!''

''என்ன, திங்கப் பிடிக்கல்லியா? நான் சமைச்ச சோத்தைப் திங்க அருவருப்பாயிருக்கா? ஏன்? நான் படிப்பில்லாத முட்டாள்னா? உன் மாதிரி சாக்ஸ், ஷூ போட்டுக்கிட்டு திரிய எனக்கு தெரியாதுன்னா?''

''அதெல்லாமல் ஒண்ணும் இல்லேம்மா! என்னைக் கொஞ்சம் அமைதியா இருக்க விடு இன்னிக்கு மட்டும்!... நானே போயிடறேன் இங்கேயிருந்து!''

வெட்டு ஒன்று, துண்டு இரண்டாக இவ்வாறு சொல்லிவிட்டுத்தான் அறைக்குப் போய்விட்டாள் ஜயந்தி, தாயிடமிருந்து சூடாக ஏதாவது பதில் வருமென்று அவள் எதிர் பார்த்தாள். ஆனால், என்ன ஆச்சரியம்! சாவித்திரியிடமிருந்து ஒரு வார்த்தை கூட வெளிவரவில்லை. ஏதோமந்திர சக்தியால் அவளது வாய் ஊமையாகிவிட்டது போல் அல்லது பேசிக் கொண்டு இருந்த ஓர் இயந்திரம் திடீரென்று பழுதாகி விட்டாற் போல்...

ஜயந்தியின் ஆபிசில் மறுநாள் யூனியன் கூட்டம் ஒன்று நடைபெறவிருந்தது.

**எதிலும் அக்கறைகொண்டு முயற்சிக்காதவரை, உங்களால் என்ன செய்ய முடியும் என்பது உங்களுக்கே தெரியாது.**

**– இங்கிலாந்துப் பழமொழி**

**தூங்குகிற வரிக்காரனை எழுப்பிவிட்டால், போன வருடத் தீர்வையையும் கொடுத்துவிட்டுப்போ என்பான்**

**–தமிழ்நாட்டுப் பழமொழி**



**வற்றாது வளம் கொழிக்கும் ஆறுகளைக் கொண்டு வானோங்கிய மலைகளைக் கொண்டு ஒரு நாட்டை மதிப்பிட முடியாது. மக்களின் மனவளத்தைக் கொண்டே மதிப்பிட முடியும்.**

**– அறிஞர் அண்ணா**

எல்லோரும் அவளை அதில் சற்றுப் பேசச் சொல்லி இருந்தார்கள். பேசத் தெரியா விட்டால், ஏதாவது எழுதிப் படிக்கச் சொன்னார்கள். அதற்கான குறிப்புகளை இந்த இரவிலேயே அவள் தயார் செய்ய வேண்டும். இந்த இரைச்சலிலும் குழப்பத்திலும் அது எப்படி முடியும்?

நாளை சனிக்கிழமை என்பதால் ஒரு வசதி, மாலை ஐந்து மணிக்குத்தான் கூட்டம். ஆபீஸ் முடிந்ததும் நேரே யூனியன் செயலாளர் வீட்டுக்குப் போய் உரையைத் தயார் செய்து விடலாம்.

உரையின் விஷயம் பழசு தான். முதலாளி, தொழிலாளி உறவு. விஷயத்தை விளக்கும் முறையில்தான் புதுமை இருக்க முடியும். ''விடுதலைப்போராட்டத்தில் போரிட்டு உணவுப் பொருட்கள், தளவாடங்களை போர் முனைக்குக் கொண்டு வந்து சேர்த்து போரில் வெற்றி ஈட்டித் தந்த காலாட்படை வீரர்களின் துக்கம் தீர்ந்ததா? அவர்களுக்கு விடிவு ஏற்பட்டதா? வரலாற்றின் பக்கங்களில் தானைத் தலைவர்களின் பெயர்கள் பொன் எழுத்துக்களில் எழுதப்பட்டு ஜொலிக்கும். அவர்களது வீரத்தையும் நாட்டுப்பற்றையும் தியாகத்தையும் போற்றிப் பக்கம் பக்கமாக எழுதப்படும். ஆனால் போரில் பங்கு பெற்ற காலாட்படைக்கு வாழ்க்கைப் போரில் தோல்விதான் மிச்சம்!...

இப்படி எல்லாம் அவள் பேச வேண்டும்.

ஜயந்தி எவ்வளவு நேரம் தூங்கி இருப்பாள் - ஒரு மணி, பத்துமணி, ஒரு யுகம்?...

அப்பா ஏன் இவ்வளவு பரிதாபமான குரலில் அவளை எழுப்புகிறார்?

''ஜயந்தி, எழுந்திரு, எழுந்திரு!.. உன் அம்மாவுக்கு



**உரையின் விஷயம் பழசு தான். முதலாளி, தொழிலாளி உறவு. விஷயத்தை விளக்கும் முறையில்தான் புதுமை இருக்க முடியும்.**

என்னவோ ஆயிடுச்சு!... நீ அவளைக் கொஞ்சம் பார்த்துக்க... நான் டாக்டரைக் கூட்டிக் கிட்டுவர்றேன்!...

அம்மாவுக்கு என்னவோ ஆயிடுச்சா? அப்படீன்னா?

திடுக்கிட்டு பனியனைக் கழுத்தில் மாட்டிக் கொண்டே உடைந்த குரலில் சொன்னார், ''கண்ணை முழிக்காமே படுத்துக் கிடக்கா.. நாடியும் தெரியல்லே. நீ கொஞ்சம் தைரியமா உக்காந்திரு அவகிட்டே... டாக்டர் வருவாரோ மாட்டாரோ தெரியல்லே... தண்ணி குடிக்க எழுந்திருந்தவ கீழே விழுந்து மயக்கமாயிட்டாளா, இல்லே மயக்கமாயிக் கீழே விழுந்துட்டாளா? தெரியல்லே''

செருப்புக் கூட மாட்டிக் கொள்ள மறந்து வெறுங் காலோடு வெளியே ஓடினார் அவர். நல்ல வேளை டாக்டர் வந்தார்.

ஆனால் கல்லுக்கு என்ன மருத்துவம் செய்வார் அவர்? கல் மாதிரி தானே பேச்சு மூச்சின்றிக் கிடக்கிறாள் சாவித்திரி!

டாக்டர் அவளைச் சோதித்துப் பார்த்தார். ரத்த அழுத்தம் திடீரென்று அதிகமாகி மண்டையிலுள்ள ரத்தக் குழாய் வெடித்து விட்டதாம். இனி சாவுக்குக் காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

அதிசய நோய்தான்!

பரபரத்து அலைந்து திரிந்து ஏதாவது சிகிச்சை செய்து பார்க்கக் கூட வழியில்லை.

வசதியான குடும்பமென்றால் அதுவும் முயற்சி செய்து பார்த்திருப்பார்கள். ஆனால் ஏழைக் குடும்பத்தில் அதெல்லாம் அனாவசிய ஆர்ப்பாட்டந்தான்.

பிஜன் பாபு மனைவிக் கருகில் உட்கார்ந்து இருந்தார். விடிந்த பிறகு மறுபடி ஒரு முறை டாக்டரைக் கூப்பிடலாம். அதற்கு மேல் செய்யக் கூடியது ஒன்றுமில்லை...

**ஏழைகள் உணவை தேடுகின்றனர்; செல்வர்கள் பசியைத் தேடுகின்றனர்.**

**– கிரீஸ் பழமொழி**

ஒரு நண்பன் என்ன
பெருகிறானோ அது நமக்கு
ஒருபோதும் நட்டம் அல்ல
– ஐரிஷ் பழமொழி

சாவித்திரி உணர்ச்சியற்றுக் கிடந்தாலும் வீட்டில் உள்ள மற்ற ஜீவன்களுக்கு உணர்ச்சி இருக்கிறதே, பசி தாகம் இருக்கிறதே!

இரவு முழுவதும் கண் விழித்த சோர்வில் பிஜன் பாபுவுக்கு மற்ற நாட்களை விட அதிகமாகவே விருப்ப மேற்பட்டது டீ குடிக்க. ஜயந்திக்கும் அதே நிலைமைதான். குழந்தைகளோ வழக்கத்தைவிட அதிகமாகவே அலறத் தொடங்கி விட்டார்கள். காரணம், வீட்டுச் சூழ்நிலை அவர்களைக் கலங்கச் செய்து விட்டது.

வெகு நேரத்தயக்கத்துக்குப் பின் அதைக் கட்டுப்படுத்திக் கொண்டு பிஜன் பாபு ஜயந்தியிடம் சொன்னார்: ''அடுப்பை மூட்டி ஏதாவது செய்யும்மா... குழந்தை குட்டிகள் பட்டினியா இருக்கு... எனக்குக்கூட ஒரு கப் டீ குடிச்சா...''

ஜயந்திக்கு ஆபீஸ் உண்டு என்ற விஷயம் அவருக்குத் தோன்றவேயில்லை.

அப்போதுதான் ஜயந்திக்கும் உணர்வு வந்தது, வீட்டு வேலையை அவள்தான் கவனிக்க வேண்டும் என்று.

அவள் சமையலறைக்குள் நுழைந்தாள். அங்கே அவள் கண்ட காட்சி..

அடுப்புக்குள் குவிந்து கிடந்தது சாம்பல். அறையெங்கும் முதல் நாள் சமையல் செய்த பாத்திரங்கள் இறைந்து கிடந்தன. தண்ணீர் டம்ளர்கள் விழுந்து கிடந்தன. முதல் நள்ளிரவு மீனுவும் சானுவும் சண்டை போட்டுக்கொண்டதன் அடையாளம்.

தினம் இரவில் மற்றவர்கள் தூங்கிவிட்ட பிறகும் வெகு நேரம் வரை சமையலறையில் வேலை செய்து கொண்டு இருப்பாள் சாவித்திரி. அடுப்பை சுத்தம் செய்வது, பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவி எடுத்து, வைப்பது, சமையலறையைக் கழுவுவது என்று ஆயிரம் வேலைகள். மண்ணெண்ணெய் அதிகம் செலவாகாமல் இருக்க விளக்கைச் சிறிதாக எரிய விட்டுக்கொண்டு, பிறர் தூக்கம் கெடாமல் இருப்பதற்காகக் கூடிய மட்டில் சத்தம் செய்யாமல் மறுநாள் சமையலுக்காகக் காய்கறி நறுக்குவது, மசாலா அரைப்பது..



**...பொறுமை இழந்துவிட்ட பிஜன் பாபுவின் மனது சாவித்திரிக்காகத்துடித்தாலும் டீயை மறந்து இருக்க முடியவில்லை...**

அம்மா படுக்கப் போவதை ஒரு நாளும் பார்த்ததில்லை ஜயந்தி.

இப்போது அம்மாவைப் பற்றி நினைத்துப் பிரயோசனமில்லை. அவள் குடும்பத்திலிருந்து முகத்தை திருப்பிக் கொண்டு படுத்துக்கிடக்கிறாள்..

ஜயந்தியை இக்கட்டில் மாட்டி வைக்கத்தான் இப்படிச் செய்கிறாளா சாவித்திரி?

இப்போது ஜயந்தி என்னென்ன செய்ய வேண்டும்? பத்துப்பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவி வைக்க வேண்டும். சமையலறையை தண்ணீர் ஊற்றிக் கழுவ வேண்டும். அடுப்பில் இருந்து சாம்பலை அள்ளி எறிந்து விட்டு அதில் கரியும் வறட்டித் துண்டுகளும் நிரப்பி நெருப்புப் பற்ற வைக்க வேண்டும். அடுப்பு பற்றிக் கொண்ட பின் டீ தயாரிக்க வேண்டும். பிறகு சாதம், பருப்பு, கறி, கூட்டு... பால் காய்ச்ச வேண்டும்... பார்லிக் கஞ்சி வைக்க வேண்டும்.... இதே மாதிரி காலையில், பகலில், இரவில்..

டீக்காகக் காத்திருந்து பொறுமையிழந்துவிட்ட பிஜன் பாபு குழந்தைகளுக்கு ஏதாவது பலகாரம் வாங்கி வருவதாகச்

**மலர்களைச் சுற்றி மனதைத் தொடும் நறுமணம் கமழும்; அதுபோலத்தான் செயற்கரிய செயல்களைச் சூழ்ந்து புகழ் திகழும்.**

**- சாக்ரடீஸ்**



> **தனக்கு என்று அடுப்பு மூட்டி, தான் வாழும் காலத்தில் வயிறும் சிறுக்கும், மதியும் பெருகும்.**
> **– தமிழ்நாட்டுப் பழமொழி**

சொல்லிவிட்டு வெளியே போய் டீக்கடையில் டீ குடித்து விட்டு வந்தார். சாவித்திரிக்காக மனது துடித்தாலும் டீயை மறந்து இருக்க முடியவில்லை.. இனி மேல் தினம் காலையில் கண்ணாடி டம்ளர் நிறைய ஆவி பறக்கும் டீயுடன் சாவித்திரி வந்து அவரை எழுப்ப மாட்டாள் என்ற நினைவில் அவர் தன்னை மறந்து காலி டீக்கோப்பையை வாயில் வைத்துக் கொண்டதைப் பக்கத்தில் உட்கார்ந்து இருந்தவர் கவனித்து, ''இன்னொரு கப் டீ குடியுங்களேன்.. மழை காலத்துக்குக் கதகதப்பாக இருக்கும்... ஏய், இவருக்கு இன்னொரு கப் டீ கொண்டு வா!'' என்றார்.

''இல்லே, வேண்டாம்'' என்று சொல்லி விட்டு அவசர அவசரமாக எழுந்தார் பிஜன் பாபு...

முட்டைப் பொறியலும் வெல்லப் பொறியலும் எவ்வளவு நேரம் வயிற்றில் உட்கார்ந்து இருக்கும்? கைக்குழந்தையும் சாந்துவும் சோற்றுக்காக அழத் தொடங்கி விட்டார்கள். பிஜன் பாபு தயக்கத்தோடு ஜயந்தியிடம் போய்ச் சொன்னார், ''ஜயா சமையலாச்சா? குழந்தைகளுக்குக் கொஞ்சம் சாதம் போடறியா? இனிமேல் அதுகளாலே பொறுக்க முடியாது போலிருக்கே...''

சாதமா?

இப்போதுதான் ஜயந்தி பற்றுப் பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவி முடித்திருந்தாள். அழுக்குத் துணி ஒரு மூட்டை கிடக்கிறது. தோய்க்க வேண்டும். குழாயில் தண்ணீர் நின்று போய்விட்டது.

மீனு தன் அக்காவுக்காக பரிதாபப்பட்டு எப்படியோ அடுப்புப் பற்ற வைக்க முயற்சித்தாள். அடுப்பிலிருந்து வந்த புகைக்கு அளவில்லை. ஆனால் அடுப்பு பற்றிக் கொள்ள வில்லை.

குளித்து விட்டு வந்த ஜயந்தி விசிறியால் விசிறி அடுப்பைப் பற்ற வைக்க முயற்சித்தாள்.



***... அம்மா இதே மயக்க நிலையில் ஒருநாளோ, இரண்டு நாளோ இருந்து விட்டுப் பிறர் தோள் மேல் ஏறிப் போய் விடப் போகிறாள்...***

அடுப்புப் பற்றிக் கொண்டால் போதும்? சமையலுக்குத் தண்ணீர்?

இதற்குள் மறுபடி பிஜன் பாபுவின் குரல், ''சாதம் ஆயிடுத்தாம்மா?''

அப்பாவின் அவசரத்தைப் பார்த்து எரிச்சல் வந்தது ஜயந்திக்கு. ஆனால் அவள் பதிலெதுவும் சொல்லவில்லை. காரணம், பிஜன் பாபுவைச் சொல்லிக் குற்றமில்லை. மணி பத்தரையாகி விட்டது.

நல்லவேளை, கல்கத்தாவில் குளம் இல்லா விட்டாலும் குழாய்க்கிணறு இருக்கிறது. சர்க்காரின் தயவில்.

மீனா ஒரு சிறு வாளியை எடுத்துக் கொண்டு போய்க் குழாய்க் கிணற்றில் பத்துப் பதினைந்து தடவை தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்தாள்...

அப்படியும் ஜயந்தி வெறும் சோறும் பருப்பும் தட்டில் பரிமாறும்போது மணி இரண்டு ஆகிவிட்டது.

ஜயந்தி சாப்பிட்டு விட்டு எழுந்திருப்பதற்குள் மணி மூன்று அடித்து விடும். அதன் பிறகு சமையலறையைக் கழுவ வேண்டும். வீட்டைக் கூட்ட வேண்டும்... பற்றுப் பாத்திரங்களைத் தேய்க்க வேண்டும்.

காலையிலிருந்து குவிந்து கிடக்கும் துணி மணிகளைத் தோய்க்க வேண்டும்... பிறகு

**''விருப்பம்போல் ரெயில் பிரயாணம்''**

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு, ரெயில் பயணம் செய்ய ஆட்களில்லாமல், மலிவுக் கட்டணப் பயணச் சலுகையை அன்றிருந்த தென் இந்திய ரெயில்வே (S.I.R.) அறிமுகம் செய்திருந்தது. 30 நாட்களில் S.I.R. ரெயில்வேயில் எங்கு வேண்டுமாயினும் எத்தனை தடவைகளாயினும் பயணம் செய்ய என்று ''விருப்பம்போல் பிரயாணம்'' என்ற சலுகையை அறிவித்திருந்தது. தென்னிந்திய ரெயில்வேயிலுள்ள அனைத்து நிலையங்களுக்கும் பயணிக்கலாம். கட்டணம் ரூ. 12.50 மட்டும்தான்.

– 'தமிழகச் சுற்றுலா சில சுவையான தகவல்கள் நூலிலிருந்து'.

### தமிழ்த்துறைத்தலைவராக அமெரிக்கர்

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் தமிழ் கல்வித்துறைத் தலைவராக பேராசிரியர் ஜயார்ஜ் எல். ஹார்ட் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கலிபோனிய பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி, இலக்கியம் மற்றும் பண்னாட்டு கல்வி வளர்ச்சிக்காக பல திட்டங்களைத் கொண்டு வந்திருக்கிறார். இவர் தமிழ் மற்றும் சமஸ்கிருதத்தில் பல நூல்கள் எழுதியுள்ளார். சங்க இலக்கியம், இராமாயணம் போன்றவற்றை மொழிபெயர்த்திருக்கிறார்.

மறுபடியும் அடுப்பு வேலை.. சாதம், பருப்பு... பிறகு மறுநாளைக்கான வேலைகளை முன்னமே செய்து வைத்தக் கொள்ள வேண்டும். இல்லா விட்டால் இன்றைக்கு நேர்ந்த தாமதமும் குழப்பமும் நாளையும் தொடரும். இன்னும் என்னென்ன வேலைசெய்ய வேண்டும்என்று அவளுக்குத் தெரியாது...

நாளையும் இதே மாதிரி வேலை... அப்புறம் நாளை மறுநாள்... பிறகு அதற்கும் மறுநாள்... இந்த வேலைகளை இனி அம்மா செய்யப்போவ தில்லை. இதே மயக்க நிலையில் ஒருநாளோ, இரண்டு நாளோ இருந்து விட்டுப் பிறர் தோள் மேல் ஏறிப் போய் விடப் போகிறாள்.

ஒருநாள் இல்லை, ஒரு வேளைபாட்டைச்சமாளிக்கவே திண்டாடிப் போய் விட்டாளே ஜயந்தி!

எங்காவது ஓடிப் போய் விடத் தோன்றியது அவளுக்கு.

அவளது நிலையைப் பார்த்து இரக்கமாயிருந்தது பிஜன் பாபுக்கு. அவர் சொன்னார், ''ஜயா, ராத்திரி மறுபடி சமைக்க வேண்டாம். நான் கடையிலே யிருந்து பிரெட் வாங்கிட்டு வரேன். நீ கொஞ்ச நேரம் அம்மாக்கிட்டே உட்கார்ந்துக்க. நான் டீ போடறேன்...''

''உன்னாலேமுடியுமாப்பா?'' சந்தேகமாகக் கேட்டாள் ஜயந்தி. ''முடியுமான்னுதான் பார்க் கிறேனே... மீனு என்னோட வந்து சாமான்கள் எங்கே யிருக்குன்னு காட்டு...

அப்பா அடுப்பு மூட்டச் சிரமப்படுவதைப் பார்த்தும் அவரது உதவிக்குப் போகத்



**... அவளுடைய எழுபது ரூபாய்ச்சம்பளத்துக்குஅவ்வளவு மதிப்பா? அந்தப் பணத்தின் பளபளப்பில் அவள் தன்னை மறந்திருந்தாளா?...**

திராணியில்லை ஜயந்திக்கு, அவள் பேசாமல் அம்மா படுத்திருக்கும் இடத்துக்கு வந்தாள்.

எலும் புந் தோலுமான உடம்புடன் உணர்ச்சியற்றுக் கிடந்த தாயைப் பார்த்துக் கொண்டு நின்றாள் ஜெயந்தி.

இந்த உடம்பை வைத்துக் கொண்டு வருடக் கணக்காக இரவும் பகலும் வீட்டுச் சுமையைத் தாங்கி வந்திருக் கிறாள் அம்மா. இவ்வளவு வருடங்களில் ஒருநாள் கூட அவர்கள் ரொட்டி சாப்பிட்டு இரவை கழிக்க நேர்ந்த தில்லை... மீனுவுக்குக் குழாய்க் கிணற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வர நேர்ந்ததில்லை... அப்பாவுக்கு சமையலறைப் பக்கம் போக நேர்ந்ததில்லை...!

ஜயந்தி இதுவரை வீட்டில் ஒருவேலைகூட செய்ததில்லை. வெற்றிலைக் கூட மடித்துக் கொடுத்ததில்லை.

அவளுடைய எழுபது ரூபாய்ச் சம்பளத்துக்கு அவ்வளவு மதிப்பா? அந்தப் பணத்தின் பளபளப்பில் அவள் தன்னை மறந்திருந்தாளா?

மணி ஐந்து அடித்தது...

ஐந்தா...? ஐந்து மணிக்கு அவளுக்கு ஒரு வேலை இருந்ததே! ஓ, யூனியன் கூட்டம்! மறந்தே போய்விட்டாள் அதை! அவள் கூட்டத்தில் என்ன பேச எண்ணி யிருந்தாள்? ஓ காலாட் படை வீரர்களின் அவலநிலை... அவர் கள் அலட்சியப்படுத்தப்படுவது.

காலாட்படை வீரர்கள் யார்? தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்கள் மட்டுந்தானா?...

(கருப்பு சூரியன் நூலிலிருந்து. வங்க மூலம் : ஆஷாபூர்ணா தேவி.தமிழில் : க. கிருஷ்ணமூர்த்தி, புவனா நடராஜன். நன்றி: சிந்து பதிப்பக அரக்கட்டளை, இராயப்பேட்டை, சென்னை - 14)

நன்றி உள்ள மனிதனுக்கு கேட்பதைவிட அதிகமாகக் கொடு

– போர்ச்சுக்கல் பழமொழி

# சுவை மிகு தகவல் பக்கம்

## கல்கத்தாவின் விலை ரூ. 1, 200

உண்மை! ஆனால் இன்றைய விலை அல்ல! 11.9.1698 அன்று ரூ. 1,200க்கு விற்கப்பட்டது கல்கத்தா! வாங்கியது கிழக்கிந்தியக் கம்பெனி! விற்றவர் சபர்ணா ராய் சவுத்ரி என்னும் நிலக் கிழார்! 300 ஆண்டுகளுக்கு முன் நாம் பிறந்திருந்து, கையில் ரூ. 1,200யும் இருந்திருந் தால் கல்கத்தாவை விலைக்கு வாங்கியிருக்கலாம். அதுமட்டுமா? அப்படிச் செய்திருந்தால் இந்த நாட்டின் சரித்திரமே திசை மாறிப் போயிருக்கும்.

## செல்வங்கள் பதினாறு!

மணமக்களை மனமார வாழ்த்தும் போது ''பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க!'' என்று வாழ்த்துவது மரபு. பதினாறு என்பதற்கு பதினாறு குழந்தைகள் என்று இடைக்காலத்தில் பொருள் கொள்ளப்பட்டதும், அதே பொருள் கொண்டு பதினாறு வேண்டாம், ஒன்றே ஒன்று போதும், என்று இன்று மணமேடையில் வாழ்த்துவதும் நாம் அறிந்த செய்திகள் தாம். உண்மையில் பதினாறு என்பது பதினாறு குழந்தைகளை அல்ல; பதினாறு செல்வங்களைக் குறிக்கிறது.

அந்தப் பதினாறு செல்வங்கள்: மனை, மனைவி, மக்கள், காய், நெல், நீர், நிலம், கால் நடை, கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், வலிமை, பொன், போகம், புகழ்.

## அறிவியல் சொற்கள் 2 இலட்சம்


தமிழில் பொறியியல், மருத்துவம், மற்றும் அறிவியல் பாடங்களைக் கற்பிக்கத் தேவையான ஏறத்தாழ 2 இலட்சம் அறிவியல் கலைச் சொற்களை தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ளது. 15 ஆயிரம் சொற்களைக் கொண்ட புதிய தமிழ் ஆங்கில அகராதியையும் உருவாக்க உள்ளது.

# குரல்வளம் தரும் அன்னாசி

அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ்தான் அன்னாசி பழத்தையும் கண்டுபிடித்தார். மேற்கு இந்தியத் தீவுகளில் கவனிப்பாரற்று காட்டுச்செடியாக ஏராளமாக அடர்ந்து வளர்ந்து இருந்த அன்னாசிதான் இவருக்கும் இவரது சக பிரயாணிகளுக்கும் அவர்களின் பயணக் காலத்தில் தாகம், பசி இரண்டையும் தணிக்கப் பெரிதும் பயன்பட்டதாகத் தெரிய வருகிறது.

ஆங்கிலத்தில் அன்னாசியைப் பைன் ஆப்பிள் (Pine Apple) என்று கூறினாலும், அன்னாசி பைன் மரத்தையோ ஆப்பிள் இனத்தையோ சார்ந்தது அல்ல. சிட்ரிக் அமில வகைப் பழங்களான ஆரஞ்சு, எலுமிச்சை, நாரத்தை இரகத்தைச் சேர்ந்ததுதான் அன்னாசி. நாம் பயன்படுத்தும் அன்னாசிப் பழம் பழமே அல்ல, திரண்ட அன்னாசிப் பூக்களையே நாம் பழமாக சுவைக்கிறோம் என்கின்றனர் தாவரவியலார். ஆரஞ்சுப் பழம், நெல்லிக்கனியைப் போலவே அன்னாசியிலும் 'சி' வைட்டமின் நிறையவே இருக்கிறது.

உடலைக் குளிர்ச்சியாக வைத்துக் கொள்ள உதவும் பழங்களில் அன்னாசிப் பழத்திற்குச் சிறப்பான இடம் உண்டு. இருதய நோய், தொண்டைப்புண், உடல்வலி போன்றவற்றைக் குணப்படுத்த அன்னாசிப் பழம் உதவும். நல்ல குரல் வளத்தைப் பெற விரும்புகிறவர்கள் அன்னாசிப் பழத்தை அடிக்கடி சாப்பிடலாம். சிறுநீரகத்தில் உருவாகும் கல்லைக் கரைக்கவும், வயிற்றுப் பூச்சிகளை ஒழிக்கவும் அன்னாசிப் பழச்சாறு அருமருந்து ஆகும். எனவே அன்னாசிப் பழத்தை அடிக்கடி சாப்பிட்டு நோயற்ற வாழ்வைப் பெறலாமே!



### மீன் சண்டை

நம் கிராமங்களில் சேவல் சண்டை என்ற ஒரு விளையாட்டு கிராமத்திருவிழாக்களில் நடைபெறுவது போல் சயாம் நாட்டில் சண்டை போடுவதற்காகவே 'பெட்டா' என்ற வகை மீன்கள் வளர்க்கப்படுகின்றன.

## நட்பிற்குப் பரிசு

ஒருமுறை செல்வந்தர் ஒருவர் திடீரென மரணமடைந்தார். அவர் மரணமடைவதற்கு முன் இரண்டு உயில்களை எழுதித் தனது வழக்கறிஞரிடம் ஒப்படைத்து அவற்றில் ஒன்றை, தான் மரணமடைந்தவுடனே பிரித்துப் பார்க்க வேண்டுமென்றும் மற்றொன்றைத் தன்னை அடக்கம் செய்த பிறகு பிரித்துப்பார்க்க வேண்டு மென்றும் கூறியிருந்தார்.

அவ்வாறே அவர் மரணமடைந்தவுடன், அவருடைய முதலாவது உயில் பிரித்துப் பார்க்கப்பட்டது. அதில், தன்னை காலை 4.00 மணிக்கு அடக்கம் செய்ய வேண்டுமென்று எழுதப்பட்டிருந்தது. அதன்படி அவரது உடல் காலை 4.00 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது. அப்போது கடும் குளிராக இருந்த காரணத்தால், அவருடைய நெருங்கிய நண்பர்கள் நால்வர் மட்டுமே அவருடைய அடக்கத்திற்குச் சென்று வந்தனர். அவர் அடக்கம் செய்யப்பட்ட பிறகு இரண்டாவது உயிலும் பிரித்துப் பார்க்கப்பட்டது. அதில் என் அடக்கத்திற்கு வந்திருந்தவர்களுக்கு என் சொத்தைப் பங்கிட்டுக் கொடுக்கவும் என்று எழுதப்பட்டிருந்தது. அதன்படி ஒவ்வொருவருக்கும் சுமார் 1.5 கோடி ரூபாய் கிடைத்தது.

## காஞ்சிப் பட்டின் கதை

பட்டு பிறந்த கதை உங்களுக்குத் தெரியுமா? சுமார் 4,500 ஆண்டுகளுக்கு முன்பு சீன அரசர் ஒருவர் தன மனைவியுடன் ஒருநாள் தோட்டத்தில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார். அப்பொழுது முசுக்கொட்டைச் செடியில் புழுவொன்று அழகிய இழைகளால் கூடு இழைப்பதை அரசி கண்டாள்; அதை எடுத்துத் தேநீரில் போட்டாள். கூட்டின் ஒரு முனையிலிருந்து இழையைப் பிரித்து எடுத்தபோது, அது பளபளப்பாகவும் மென்மையாகவும் இருந்தது. அரசி அதனாலான ஆடையை அணிய விரும்பினாள். இதைத் தொடர்ந்தே பட்டுப் புழுக்களை வளர்த்து, இழைகளை எடுத்துப் பட்டுத்துணி உற்பத்திச் செய்யத் தொடங்கினார்கள்.

2,000 ஆண்டுகளாகச் சீனர்கள் பட்டு உற்பத்தியை இரகசியமாகப் பாதுகாத்து வந்தார்கள். பல நூற்றாண்டுகளுக்குப் பின் பட்டுத்தொழில் கொரியா வழியாக ஜப்பானிலும், பின்னர் இந்தியாவிலும் பரவியது.

## இவர் அல்லவோ டாக்டர்!

டாக்டர் ரங்காச்சாரி ஒரு முறை உயிருடன் போராடிக் கொண்டிருக்கும் நோயாளி ஒருவரைக் காப்பாற்ற ரயிலில் வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. அங்குச் சென்றபோதோ அந்த நோயாளி இறந்துவிட்டார். அதைக் கண்ட டாக்டர் ரங்காச்சாரி தன்னுடைய காலதாமதத்தினாலேயே அந்த நோயாளியைக் காப்பாற்ற முடியவில்லை என்று மிகவும் மனம் வருந்தினார். உடனே மருத்துவம் செய்வதற்கு வெளியூர்ப் பயணத்திற்கென ஒரு விமானத்தையே சொந்தமாக வாங்கிக் கொண்டார்.

## மும்மணிகளில் நான் எம்மணி?


ஒரு கூட்டத்தில் ரசிகமணி டி.கே.சி, கல்கி கிருஷ்ணமூர்த்தி, ம.பொ.சி ஆகியோர் கலந்து கொண்டனர். வரவேற்புரை ஆற்றியவர் ''இங்கு மும்மணிகள் வந்துள்ளனர்'' என்று கூறினர்.

கல்கி அவர்கள் பேசும்போது அதனைக் குறிப்பிட்டு இங்கு மும்மணிகள் வந்துள்ளதாகக் கூறினார். ஒருவர் ரசிகமணி (டி.கே.சி) மற்றொருவர் கிராமணி (ம.பொ.சிவஞானகிராமணி) மூன்றாவது மணியாக இருக்க நான் ஒரு பெண்மணியாகக்கூட இல்லையே'' என்றார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம் , சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927

## ஆசிரியர் மடல்

# உலகத்தை இன்னும் குளிர்ச்சியாக்குவோம்





மரங்களைப் பார்க்கும் பொழுதெல்லாம்
மனதுக்குச் சிறகு முளைக்கிறது
ஒவ்வொரு மரமும் தோகை விரித்து நிற்கும்
ஒற்றை மயிலாய்த் தெரிகிறது.
காற்றை வழித்து விடும் துடுப்பாய்
பூமிக்குள்ளே கால்களைப் புதைத்து
வாயுமண்டலத்தில் மூச்சுவிடும்
அதிசயங்களாய் அவை பரிமளிக்கின்றன.
மரங்கள்
பறவைகளுக்குச் சரணாலயங்கள்
பாதசாரிகளுக்கு பாதுகைகள்
பயணிகளுக்கு நிழற்குடைகள்.
கால்நடைகளுக்குப் புழுதிக்கட்டில்கள்
மலர்களுக்குப் பிரசவவிடுதிகள்
வண்டுகளுக்கு வாசக சாலைகள்
பனித்துளிகளின் படுக்கையறைகள்
மரங்களில் சின்ன உலகங்கள் சேமிக்கப்பட்டிருக்கின்றன.

மரங்களுக்கு விலை நிர்ணயிக்கும் பொழுதெல்லாம்
தன்னுடைய மதிப்பையும் மனிதன்
நிர்ணயித்துக் கொள்கிறான்
முழம் போடும் பொழுது கைகளின் நீளமும்
கணக்கிடப்படுவது போல.

பழங்களை ருசிக்கும் பொழுதெல்லாம்
மரங்களை, நட்டவர்களை நினைத்துக் கொள்ள வேண்டும்
வேர்களை நோக்கி விழுதுகள் குனிந்து
வணங்குவதைப் போல.

நாமும் நிறைய மரங்களை நடுவோம்;
வந்தபொழுது இருந்ததை விட
உலகத்தை இன்னும் குளிர்ச்சியாக்குவோம்.


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி